
# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 7 வெள்ளிக்கிழமை (21-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:115


**ஈ-ராக் போர் பற்றிய விரிவான செய்திகள் அடங்கிய விசேட செய்தித் தொகுப்பு இன்றைய உதயனின் நடுப்பக்கங்களில் பிரசுரமாகியுள்ளது**



செங்கடலில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் போர்க் கப்பல் ஒன்றிலிருந்து முதலாவது குருஸ் ஏவுகணை பக்தாத்தை நோக்கி சீறிக்கிளம்பிய காட்சி.

# பக்தாத் அதிர்கின்றது!



காயமடைந்த பெண்ணொருவர்

## பேயறைந்த நகராக காட்சி

பக்தாத்,(ஈராக்)மார்ச்21

ஈராக் மீதான போரை நேற்றுக் காலை ஆரம்பித்த அமெரிக்கா, ஈராக்கின் தலைநகரான பக்தாத் உட்பட சில இடங்களைத் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருக்கின்றது. அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுகளை வீசித்தாக்க, நீண்ட தூர ஏவுகணைகள் தலைநகர் மீது சீறிப் பாய்ந்தன. வெடியோசைகளால் நகரம் அதிர்ந்து கொண்டிருக்கிறது. பக்தாத் அருகிலுள்ள ஈராக்கின் சிரேஷ்ட தலைவர்களின் இருப்பிடங்களை இலக்கு வைத்தே இந்த ஆரம்பத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்றுப் பகல் இடம்பெற்ற முதற் கட்ட தாக்குதலில் சிவிலியன் ஒருவர் கொல்லப்பட்டார்; 14 பேர் காயமடைந்தனர் என்று செம்பிறைச் சர்வதேசக் குழு உறுதிப்படுத்தியது.

அமெரிக்கா பெரும் எடுப்பில் தாக்குதலை ஆரம்பிக்கும் என்று இராணுவ ஆய்வாளர் கூறியிருந்ததற்கு மாறாக குறிப்பிட்ட சில இலக்குகள் மீதே அமெரிக்கா தாக்குதல் நடத்தியிருக்கிறது.

எப் - 117 ஏ ரக சண்டை விமானங்களும் நீண்ட தூர ஏவுகணைகளுமே தாக்குதலை ஆரம்பித்தன என்று அமெரிக்க அதிகாரிகள் கூறினர். எதிர்வரும் நாள்களிலேயே ஏவுகணைகளினதும் குண்டுகளினதும் பலத்த தாக்குதல் ஆரம்பமாகும் எனவும் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். வளைகுடா பிராந்தியத்திலுள்ள கப்பல்களிலிருந்தே சண்டை விமானங்கள் தாக்குதலுக்கு அனுப்பப்பட்டன.

ஈராக் பிராந்தியத்தில் குவிக்கப்பட்டிருக்கும் அமெரிக்கப் படைகள் எதுவும் நேற்றைய தாக்குதலில் ஈடுபடுத்தப் படவில்லை. ஈராக் - குவைத் எல்லையிலுள்ள இராணுவ சூனியப் பிரதேசத்தில் அமெரிக்க - பிரிட்டிஷ் (11 ஆம் பக்கம் பார்க்க)

## எண்ணெய்க் கிணறுகள் பஸ்ராவில் எரிகின்றன?

வாஷிங்டன்,மார்ச்21

பஸ்ரா நகருக்கு அருகே எண்ணெய்க் கிணறுகளுக்கு தீ மூட்டப்பட்டிருப்பதாக 'பொக்ஸ்' தொலைக்காட்சி (FOX TV) நேற்று வெளியிட்ட செய்தியை ஈராக் மறுத்திருக்கின்றது. பஸ்ரா நகருக்கு வெளியே எண்ணெய்க் கிணறுகளை ஈராக் எரித்து விட்டிருப்பதாக 'பொக்ஸ்' தொலைக்காட்சி தெரிவித்தது.

"இது அமெரிக்கர்களின் பொய்யான வேலை. எண்ணெய்க் கிணறுகள் எரிவதாக போலியான படத்தை அவர்கள் காட்டியிருக்கிறார்கள்" என்று ஈராக் எரிபொருள்துறை அமைச்சர் அமிர் முகமட் ரஷீட் தெரிவித்தார்.

இதேவேளை, பஸ்ரா அருகே சில எண்ணெய்க் கிணறுகளுக்கு ஈராக்கிய படைகள் தீ வைத்துவிட்டதாக குவைத் தொலைக்காட்சி தெரிவித்தது.

அமெரிக்க விமானங்கள் எண்ணெய்க் கிணறுகள் மீது தாக்குதல் நடத்தின என்று ஈரானிய செய்தி ஏஜென்சி தெரிவித்தது.

போர் தொடங்கியவுடன் பெரிய எண்ணெய்க் கிணறுகளை எரித்துவிட ஈராக் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் முன்னர் கூறியிருந்தனர்.(ஐ)

## பின்லேடனைத் தேடி ஆப்கானிஸ்தானில் படை நடவடிக்கை

காபூல்,மார்ச்21

அல்-கெய்டா தீவிரவாதிகளை தேடி அழிக்கும் மிகப் பெரிய படை நடவடிக்கை ஒன்றை அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் ஆரம்பித்திருக்கின்றன.

நேற்று விடிகாலை பக்தாத் மீதான தாக்குதல் ஆரம்பமாகிய வேளை தெற்கு ஆப்கானிஸ்தானில் இந்த தேடுதல் நடவடிக்கையும் தொடங்கியது.

அல்-கெய்டா தலைவர் ஒஸாமா பின்லேடனும், அவரது தீவிரவாத (12ஆம் பக்கம் பார்க்க)



"வெற்றி நமதே" என்று கோஷமிடும் பக்தாத் நகரவாசிகள்.

# இலங்கை சமாதானப் பேச்சுக்களில் ஈ-ராக் போரின் தாக்கம் வெளிப்படும்



ஈராக் போரின் தாக்கம் நேற்று யாழ்ப்பாணத்திலும் உடனடியாகவே எதிரொலித்தது. நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை முற்றுகையிட்டு நிற்கும் பாவனையாளர்களையே படத்தில் காணுகிறீர்கள். (விரிவான செய்தி, படங்கள் IV ஆம் பக்கத்தில்)

## எதிர் விளைவுகளைச் சந்திக்க நேரிடலாம் என்கிறார் அகாஷி

ஜப்பானிலிருந்து ந.வித்தியாதரன்

ஹக்கோனி,மார்ச்21



**ஈராக் யுத்தம் எங்கள் எல்லோரையும் கவலைக்குள்ளாக்கியிருக்கிறது. அது நீண்டகாலம் நீடிக்குமானால் பின்னடைவைத்தரும் எதிர்விளைவுகளை நாம் சந்திக்க வேண்டி இருக்கும். இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படும். சமாதானப் பேச்சுக்களிலும் உதவும் நாடுகளின் கூட்டத்திலும் கூட அதன் தாக்கம் வெளிப்படும்.**

**இலங்கை விவகாரங்களுக்கான ஜப்பானின் விசேட தூதர் யசூஷி அகாஷி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.**

ஜப்பானின் ஹக்கோனி நகரில் அரசு - புலிகள் பேச்சு நடைபெறும் ஹக்கோனி பிறின்ஸ் ஹோட்டலில் வைத்து ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி நேற்று வியாழக்கிழமை நண்பகல் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம், 10 ஆம் திகதிகளில் ஜப்பானில் நடை (11 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

MICRO PC SYSTEMS
கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
ஜப்பானிய ஷார்ப் நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225159
Browns

ASIAN COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

SHARP Action of the day



நேற்று சதம் அடித்த கங்குலி சிக்ஸ் விளாசும் காட்சி.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் BROWNS ELECTORINICS Browns

## பெண்களுடன் வீரர்கள் தொடர்பா?

கிரிக்கெட் உலகக்கிண்ண போட்டிகளின் போது தென்னாபிரிக்காவிலிருந்த பாகிஸ்தான் வீரர்கள் பெண்களைச் சந்தித்தனரா என்பது குறித்த விசாரணைக்கு அந்நாட்டுக் கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுடனான ஆட்டத்துக்கு முன்பு, பெண் விருந்தாளிகளை பாகிஸ்தான் வீரர்களில் நால்வர் சந்தித்தனர் என இங்கிலாந்து பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இதையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

மேலும் இது தொடர்பாகத் தகவல்களைத் தருமாறு ஐ.சி.சியையும் ஊழலுக்கு எதிரான பிரிவையும் கிரிக்கெட் சபை கேட்டுள்ளது.

வீரர்கள் தங்கியிருந்த ஹோட்டல் நிர்வாகத்திடமிருந்தும் அறிக்கை பெறப்பட்டுள்ளது. தங்கியிருந்த அறைகள் உள்ள தளத்தின் பார்வையாளர்கள் பட்டியலையும் ஹோட்டல் நிர்வாகத்திடம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டுள்ளது.

இந்த விவகாரத்தை எச்சரிக்கையுடன் கையாளுவோம் என சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். நன்னடத்தை விதிகளை வீரர்கள் மீறியுள்ளமை நிரூபணமாகும் பட்சத்தில் வீரர்கள் மீது கடுமையான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜயசூரியாவின் எதிர்காலம்

கொழும்பு,மார்ச்21

இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் சனத் ஜயசூரியாவின் எதிர்காலம் குறித்து அவருடன் தேர்வுக் குழுவினர் பேச்சு நடத்தவுள்ளனர்.

உலகக் கிண்ணத் தொடரின் அரை



யிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவிடம் 48 ஓட்டங்களால் இலங்கை தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது.

இன்று காலை இலங்கை அணி தாயகம் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

"சனத் ஜயசூரிய தொடர்ந்தும் தலைமைப் பதவியில் நீடிக்க விரும்புகிறாரா? அல்லது துடுப்பாட்டத்தில் மாத்திரம் கவனம் செலுத்த விரும்புகிறாரா? என்று அவரிடம் கேட்கவுள்ளோம்."

- இவ்வாறு இலங்கைக் கிரிக்கெட் தேர்வுக் குழுவின் தலைவர் கை டி அல்விஸ் கூறினார். (ம)

# ஆரம்ப ஆட்டக்காரராக இறங்க என்ன தகுதி இல்லை என்னிடம்?

## சௌரவ் கங்குலி கேட்கிறார்

பேட்டி கொடுக்கிறேன் என்று சௌரவ் கங்குலி வாயைத் திறந்தாலே விவகாரம்தான். ஏதாவது கூறி பரபரப்பை ஏற்படுத்திவிடுவார்.



"ஆரம்ப ஆட்டக்காரராக இறங்க என்னிடம் என்ன தகுதி இல்லை?" என்பதுதான் அவரின் புதிய தாக்குதல். சச்சின், ஷேவாக் ஆட்டத்தைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன் என்றும் பயமுறுத்துகிறார். உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டத்திற்கு முன்னதாக கங்குலி அளித்த பேட்டியிது.

உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவின் தோல்விக்காக அணித்தலைவர் ஷேன் பொலக்கை தூக்கியது தவறு. தோல்விக்கு தலைவரை மட்டுமே குற்றம் சொல்லக் கூடாது. இப்படிப்பட்ட முடிவுகளை எடுக்குமுன் அணியின் ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் கிரிக்கெட்சபை பரிசீலனை செய்ய வேண்டும்.

மோசமாக விளையாடியதால்தான் ஆரம்ப ஆட்டக்காரர் நிலையில் இருந்து கீழிறங்கினேன் என்று வரும செய்திகள் தவறானவை. அணியின் நலனுக்காகத்தான் கீழிறங்கினேன். ஆரம்ப ஆட்டக்காரராக விளையாட எனக்கு என்ன தகுதி இல்லை? 20 சதம் அடித்திருக்கிறேன். ஏறக்குறைய 9ஆயிரம் ஓட்டங்கள் எடுத்திருக்கிறேன். இந்த அடிப்படையில் பார்த்தால் சச்சின் மட்டும்தான் ஆரம்ப ஆட்டக்காரராக இறங்க என்னைவிடத் தகுதியானவர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

**தற்போது நடைபெற்றுவரும் கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியில் சிறந்த துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சுக்களின் பெறுபேறுகள் விவரம் வருமாறு:-**

| அதிகூடிய தனிநபர், ஓட்டங்கள் | | |
|---|---|---|
| ஓட்டம் | பெயர் | அணி |
| 172 | கிரேக் விஷாட் | ஸிம்பாப்வே |
| 152 | சச்சின் டெண்டுல்கர் ★ | இந்தியா ★ |
| 143 | அன்ரு சிமென்ஸ் ★ | ஆஸ்திரேலியா ★ |
| 143 | ஹேர்சல் கிப்ஸ் | தென்னாபிரிக்கா |
| 141 | ஸ்கொட் ஸ்ரைரிஸ் | நியூஸிலாந்து |
| 134 | ஸ்ரீபுன் பிளமிங் | நியூஸிலாந்து |
| 134 | வான் நூர் விட்ஜ்க் | நெதர்லாந்து |
| 124 | மாவன் அத்தப்பத்து | இலங்கை |

| தனிநபர் மொத்த ஓட்டங்கள் | | |
|---|---|---|
| ஓட்டம் | பெயர் | அணி |
| 586 | சச்சின் டெண்டுல்கர் ★ | இந்தியா ★ |
| 384 | ஹேர்சல் கிப்ஸ் | தென்னாபிரிக்கா |
| 368 | மாவன் அத்தப்பத்து | இலங்கை |
| 332 | அன்டி பிளவர் | ஸிம்பாப்வே |
| 351 | கில்கிறிஸ்ட் | ஆஸ்திரேலியா ★ |
| 330 | சௌரவ் கங்குலி ★ | இந்தியா ★ |
| 321 | ஸ்ரீபன் பிளமிங் | நியூஸிலாந்து |
| 304 | சனத் ஜயசூரிய | இலங்கை |

| ஓர் ஆட்டத்தில் சிறந்த பந்துவீச்சு | | |
|---|---|---|
| விக்கெட் | வீரர் | அணி |
| 7/15 | கிளன் மெக்ராத் ★ | ஆஸ்திரேலியா ★ |
| 7/20 | அன்றூ பிக்சல் | ஆஸ்திரேலியா ★ |
| 6/23 | அஸிஸ் நெஹ்ரா | இந்தியா |
| 6/23 | ஷேன் பொன்ட் | நியூஸிலாந்து |
| 6/25 | சமிந்தவாஸ் | இலங்கை |
| 5/24 | கொலிஸ் ஒபுயா | கென்யா |
| 5/27 | ஒஸ்ரின் கொட்றிங்டன் | கனடா |
| 5/28 | வஸீம் அக்ரம் | பாகிஸ்தான் |

| கூடிய விக்கெட்டுக்களை வீழ்த்தியோர் | | |
|---|---|---|
| விக்கெட் | வீரர் | அணி |
| 23 | சமிந்தவாஸ் | இலங்கை |
| 20 | பிரட்லீ | ஆஸ்திரேலியா ★ |
| 18 | கிளன் மெக்ராத் | ஆஸ்திரேலியா ★ |
| 17 | முத்தையா முரளிதரன் | இலங்கை |
| 17 | ஷேன் பொன்ட் | நியூஸிலாந்து |
| 16 | வெஸ்பர்ட் டிரக்ட்ஸ் | மேற்கிந்தியத்தீவு |
| 15 | அன்றூ பிக்சல் | ஆஸ்திரேலியா ★ |
| 15 | ஷகீர் கான் | இந்தியா ★ |
| 15 | ஸ்ரீநாத் | இந்தியா ★ |

★ இந்த அடையாளம் தொடர்ந்து விளையாடிக்கொண்டிருப்பவர்களைக் குறிக்கும்.

# 'அவுட்' கொடுக்காதபோதும் மனச்சாட்சிப்படி திரும்பினேன்!

## கில்கிறிஸ்ட் தெரிவிப்பு

போர்ட் எலிசபெத்,மார்ச்21

"நான் ஆட்டமிழக்கவில்லை என நடுவர் கூறினாலும், மனச்சாட்சியின் படி பெவிலியனுக்குத் திரும்பினேன்" - என ஆஸ்திரேலிய உப - தலைவர் அடம் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.



போர்ட் எலிசபெத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இலங்கையின் அரவிந்த வீசிய பந்தை அடிக்க முற்பட்டார் கில்கிறிஸ்ட். பந்து துடுப்பிலும் கால் கவசத்திலும் பட்டு சங்கக்கரவின் கைகளில் தஞ்சம் அடைந்தது. நடுவர் ரூடி கோயர்ட்சன் குழப்பத்தில் இருக்க, களத்தைவிட்டு கில்கிறிஸ்ட் வெளியேறினார்.

"ரூடி கோயர்ட்சன் நான் ஆட்டமிழக்கவில்லை என்பதற்காகத் தலையை அசைத்ததைக் கவனித்தேன். இருந்தும், பந்து தடுப்பில்பட்டது என நினைத்

(11 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்



கிரிக்கெட் உலகக் கிண்ணம் 2003

World Cup 2003

# இந்திய வீரரின் உறக்கத்தை கெடுத்த இலங்கை அணி

கேப்டவுன்,மார்ச்21

ஆஸிக்கும் இலங்கைக்கும் நடந்த அரையிறுதி ஆட்டத்தைப் பார்த்த இந்திய வீரர்கள், அன்று இரவு முழுவதும் அது குறித்தே விவாதித்தனர் என தென்னாபிரிக்காவிலிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக இலங்கையின் ஆரம்ப ஆட்டக்காரர்கள் செய்த தவறுகளும் மத்திய துடுப்பாட்ட வீரர்கள் சரிந்த விதம் குறித்துமே இந்திய வீரர்கள் அலசியுள்ளனர்.

இதனால், ஆஸியின் துடுப்பு மிக்க பந்துவீச்சை சமாளிக்க இந்திய ஆரம்ப ஆட்டத்தில் சிறிய மாற்றமும் களம் இறங்கும் வீரர்களில் சிறிய மாற்றம் செய்யவும் முடிவுசெய்திருப்பதாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
18, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 5
தொ.பேசி: 01-360290,360291,074-512666

ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

### தாராளமாக கையிருப்பு உள்ள போதும்

# எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மக்களின் செயற்பாடே காரணம்!

## இன்று நிலைமை சீராகும் என்கிறார் அதிகாரி

யாழ்ப்பாணம்,மார்ச்21

குடாநாட்டில் எரிபொருள்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை. அவை தாராளமாக உள்ளன. ஆனால், வீண் அச்சம் காரணமாக பொதுமக்கள் எரிபொருளை அளவுக்கதிகமாக வாங்கி சேமிக்க முயற்சித்ததாலேயே நேற்று எரிபொருள்களுக்கு திடீர் தட்டுப்பாடு ஏற்பட்டது என்று தெரிவித்தார் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் ஏ.அந்தோனிப்பிள்ளை.

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் தொடங்கியுள்ளதை அடுத்து நேற்றுக் குடாநாட்டு மக்கள் எரிபொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு அலைந்து திரிந்தமை தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொது மக்களும் வாகனச் சொந்தக்காரர்களும் கடந்த சில தினங்களாகவே அதிக அளவில் எரிபொருள்களைக் கொள்வனவு செய்தமையே தற்காலிக தட்டுப்பாட்டுக்குக் காரணம். ஆனால், இன்று சகல எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் எரிபொருளகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்தியன் எண்ணெய் கூட்டுத்தாபனமே (I.O.C.) இலங்கைக்குத் தேவையான பெருமளவு எரிபொருள்களை வழங்கிவருகிறது. அத்துடன், குடாநாட்டுக்குத் தேவையான எரிபொருள்கள் மாதாமாதம் கொழும்பிலிருந்து தற்போது சீராக எடுத்துவரப்படுகின்றன.

குடாநாட்டுக்கு மாதம்தோறும் 5 லட்சம் லீற்றர் பெற்றோலும் தலா 15 லட்சம் லீற்றர் மண்எண்ணெய் மற்றும் டீசல் என்பன தேவைப்படுகின்றன. இதற்கேற்ப எரிபொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. ஆகவே, பொது மக்கள் அளவுக்கு மிஞ்சிய எரிபொருள்களைக் கொள்வனவு செய்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தக் கூடாது.

தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை சீர்படுத்த மோட்டார் சைக்கிள்களுக்கு 5லீற்றர் பெற்றோலும் கார்களுக்கு 10லீற்றர் பெற்றோலும் விநியோகிக்குமாறு எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றார் பிராந்திய முகாமையாளர்.

(ஒ-10)

# சு.க. ஜே.வி.பி. கூட்டமைப்பு பேச்சு குறித்து 28 ஆம் திகதி இறுதித் தீர்மானம்

கொழும்பு,மார்ச்21

கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுக்களை எதிர்வரும் 28 ஆம் திகதி பூர்த்தி செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்விரு கட்சிகளினதும் பிரதிநிதிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கூட்டத்தில் நடைபெற்ற பேச்சுக்களின் போது இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரான சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாடு சென்றிருப்பதால் இப்பேச்சுக்களை 28 ஆம் திகதிவரை ஒத்திவைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. அன்று நடைபெறும் பேச்சுக்களில் ஜனாதிபதியும் கலந்துகொள்வார்.

கூட்டமைப்புக் குறித்து இரு தரப்பினருக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டிருப்பதாகவும், 28 ஆம் திகதி நடைபெறும் பேச்சுக்களில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுமெனவும் அமுனுகம கூறியிருக்கிறார். (ஐ)

# குவைத்திலுள்ள இலங்கையர்களை பாதுகாக்க விசேட திட்டங்கள்

## கட்டுநாயக்காவிலிருந்து விமான சேவைகள் ரத்து

கொழும்பு,மார்ச்21

குவைத்திலுள்ள சுமார் 1,70,000 இலங்கையருக்குப் போதிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக குவைத் அரசு இலங்கையிடம் அறிவித்திருக்கிறது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

தொடங்கியிருக்கும் ஈராக் போரின் போது ஈராக்கினால் குவைத் மீது தாக்குதல் நடத்தும் ஆபத்து உருவானால் இலங்கையர் உட்பட ஏனைய வெளிநாட்டவர்களைப் பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்ல குவைத்தினால் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் கூறினார். அவசர நிலையில் வெளிநாட்டவர்களுக்கு உதவுவதற்காக குவைத் விசேட நிதியம் ஒன்றை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், குவைத்திலுள்ள விமான நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்படுகிறது. இதனால் கட்டுநாயக்காவிலிருந்து குவைத் செல்லும் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நேற்று ரத்துச் செய்யப்பட்டுவிட்டன. (ஐ)

### புலிகளின் அரசியல் விவகாரக் குழுவின்

# வெளிநாட்டுப் பயணத்தின் பின்னரே அதிகாரப் பகிர்வு விடயத்தில் முடிவு

## நேற்றைய பேச்சுக்களில் புலிகள் சுட்டிக்காட்டினர்

புலிகளின் 20 உறுப்பினர்கள் கொண்ட அரசியல் விவகாரக்குழு வெளிநாடுகளுக்கான மூன்று மாதப் பயணத்தை முடித்து வந்த பின்னர் அமைப்புக்குள் விவாதித்து அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் பற்றிய தீர்மானம் மேற்கொள்ளப்படும். அதுவரை அரசியல் விவகாரத்தில் தீர்க்கமான முடிவுகளை எட்டுவது இயலாததாகும்.

- இவ்வாறு நேற்று ஜப்பானில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களில் புலிகள் தரப்பினால் சுட்டிக்காட்டப்பட்டதாக தெரிகிறது.

நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்ற பேச்சுக்களின் போது ஆராயப்பட்ட விடயங்கள் பற்றிய தகவல் வருமாறு:-

அதிகாரப் பகிர்வு அலகுக்கான நிதி அதிகாரங்கள் குறித்து ஆராய்வது என்று முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது குறித்தும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான மூலாதார விடயங்கள் பற்றியும் கூட காலையில் நடைபெற்ற பேச்சுக்களில் பொதுவாகக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. எனினும், தீர்வு ஏதும் - எட்டப்படவில்லை.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் அதிக உதவி பெறுவதாயின் அரசியல் தீர்வு விவகாரம் பற்றிய பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் காட்டப்படுவது அவசியம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

அடிப்படை மனித உரிமைகள் விடயத்திலும் அது பற்றிய பிரகடனத்திலும் கணிசமான முன்னேற்றத்தை வெளிப்படுத்துவது என்றும், அரசியல் விவகாரப் பேச்சு தொடர்பாக ஓர் அட்டவணையை அல்லது நேரசூசியைத் தயாரிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டதாக அறியவந்தது.

அதிகாரப் பகிர்வு அலகில் முஸ்லிம்களின் நிலை தொடர்பாக முஸ்லிம்களின் தலைமைத்துவம் முதலில் புலிகளுடனும், அரசுத் தரப்புடனும் தனித்தனியாக விரிவாக - பேச்சு நடத்த வேண்டும் என்ற கருத்தும் கூட்டத்தில் கவனத்தில் கொள்ளப்பட்டதாகத் தெரிகின்றது. தனித்தரப்பாக முஸ்லிம்களின் தரப்பு பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கு ஒரு முன்நடவடிக்கையாக இந்த ஏற்பாடு என்றும் அங்கு கூறப்பட்டது.

'சிரான்' உபகுழுவின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவது பற்றிய விடயமே நேற்று மாலை நடைபெற்ற பேச்சுக்களில் ஆராயப்படவிருந்தது.

ஏப்ரல் கடைசியில் நடைபெறவிருக்கும் ஏழாவது சுற்று அமைதிப் பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரல் குறித்தும் இன்று (வெள்ளிக்கிழமை) மாலை அமைதிப் பேச்சுக்களின் முடிவில் நடைபெறும் செய்தியாளர் மாநாட்டில் விவரம் வெளியிடப்படும்.

## அஞ்சலி நிகழ்வு

சர்வதேச கடற்பரப்பில் காவியமான புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 11 பேருக்கான அஞ்சலிக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பலை கடந்த 10 ஆம் திகதி ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்கி மூழ்கடித்தபோது இவர்கள் வீரச்சாவடைந்தமை தெரிந்ததே.

(ஒ-117)

# கொடுப்பனவில் முறைகேடா? உடன் எனக்கு அறிவியுங்கள்

## அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்21

மீள் குடியமர்வுக் கொடுப்பனவு நடைமுறையில் ஏதாவது சீர்கேடுகளோ அல்லது முறைகேடுகளோ இடம்பெறின் அது தொடர்பான விவரங்களைத் தமக்கு அனுப்புமாறு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் கேட்டிருக்கிறார்.

இதுதொடர்பாக அரச அதிபர் செ.பத்மநாதன் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்திருக்கிறார்.

அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 22ஆம் திகதிக்குப் பின்னர் தமது முன்னைய இருப்பிடங்களில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு அவர்களது மாத வருமானம் 2ஆயிரத்து 500க்கு மேற்படாதிருப்பின், மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா அவர்களது வங்கிக் கணக்கிற்கு ஊடாக கொடுப்பனவு செய்யப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

போரினால் பாதிக்கப்பட்ட, குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

கிராமிய புனர்வாழ்வுக் குழுவினால (VRCC) விதந்துரைக்கப்பட்டு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுக்கு உரித்துள்ள குடும்பங்களின் பெயர்ப்பட்டியல் பொது மக்களின் தகவலுக்காக கிராமத்தின் பொது இடங்களின் விளம்பரப் பலகையில் ஒட்டுப்பட்டு, முறைப்பாடு எதுவும் இல்லாதிருப்பின் பிரதேச செயலரினால் சிபாரிசு செய்யப்பட்டு எனக்கு அனுப்பிவைக்கப்படும் குடும்பங்களின் விவரம் பட்டியலிடப்பட்டு பயனாளியின் ஒப்பம் பெறும் பொருட்டு, யாழ்.மாவட்ட செயலக அலுவலர்களினால் குறித்த பிரதேச அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஒப்பம் பெறப்பட்டு, என்னால் அனுமதிக்கப்பட்ட பின்னர் மாவட்ட 'நிக்கொட்' அலுவலகத்தினால் இக்கொடுப்பனவு செய்யப்பட்டு காசோலை வங்கிக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படுகிறது. பயனாளிக்கும் உரிய அறிவுறுத்தல் கடிதம் அனுப்பிவைக்கப்படுகிறது.

இந்தக் கொடுப்பனவு நடைமுறை யு.என்.எச்.சீ.ஆர். அதிகாரிகளினால் மேற்பார்வையிடப்பட்டும் வருகிறது.

இக் கொடுப்பனவு நடைமுறையில் ஏதாவது சீர்கேடுகளோ அல்லது முறையீனங்களோ நடைபெறின் அல்லது இந்த நடைமுறையால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் இக்கொடுப்பனவுக்கு உரித்துடைய குடும்பங்கள், தமக்கு இக்கொடுப்பனவு மறுக்கப்பட்டால், அதனை எழுத்தில் எனக்கு அறியத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் மீளக் குடியமர்ந்த, ஏதாவது ஒரு பகுதிக் கொடுப்பனவைப் பெற்றுள்ளவர்கள் தொடர்பாக புனர்வாழ்வு மீளக்குடியமர்வு அமைச்சின் அதிகாரிகளிடம் நிதி ஒதுக்கீட்டுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும், அதற்கான அனுமதி கிடைத்ததும் அவர்களுக்கான மீகுதிக் கொடுப்பனவு வழங்கப்படும் என்பதனையும் இத்தால் தெரிவிக்க விரும்புகிறேன்.

இவ்வாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(ஐ-3)

# 11 போராளிகளுக்கும் வடமராட்சியில் அஞ்சலி

கரவெட்டி,மார்ச்21

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட புலிகளின் வணிகக் கப்பலில் வீரச்சாவடைந்த பதினொரு புலி உறுப்பினர்களின் உருவப்பட ஊர்திப் பவனியும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் நேற்று வடமராட்சியில் இடம்பெற்றன.

கப்பல் வடிவில் அமைக்கப்பட்ட ஊர்தி 11 புலி உறுப்பினர்களின் உருவப்படங்களைத் தாங்கிய வண்ணம் முற்பகல் 9 மணிக்கு நவிண்டிலில் இருந்து புறப்பட்டது.

வடமராட்சியின் பல பகுதிகளிலும உள்ள மக்கள் உருவப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நெல்லியடிச் சந்தியில இருந்து 'பாண்ட்' வாத்திய அணி வகுப்பு மரியாதையுடன் புறப்பட்ட ஊர்தி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள கரும்புலி கப்டன் மில்லரின் நினைவாலயத்தின் முன்றிலில் பொது மக்களின் அஞ்சலிக்காக நிறுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட புலிகளின் பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (ஐ-70)

# தென்கிழக்கு பல்கலை ஊழியர்களின் வேலை நிறுத்தம் இடை நடுவில் முடிவு

அட்டாளைச்சேனை,மார்ச்21

தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்களின் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் இடைநடுவில் கைவிடப்பட்டது.

இலங்கை அனைத்துப் பல்கலைக் கழக ஊழியர்கள் சங்கத்தின் தீர்மானத்தின்படி பல அம்சக்கோரிக்கைகளை முன் வைத்து நேற்று தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் கோரிக்கைக்கு அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சம்மேளனத் தலைவர் லயனல் மல்வத்தையிடம் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் ஹாசீம் இணக்கம் தெரிவித்ததை அடுத்தே வேலை நிறுத்தம் இடைநடுவில் கைவிடப்பட்டது. அமைச்சர் இணக்கம் தெரிவித்திருப்பதை சம்மேளனத் தலைவர் லயனல் மல்வத்த 'பக்ஸ்' மூலமாக தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவருக்கு அறிவித்தார்.

(ஐ)

# புத்தளம் அசம்பாவிதங்களில் பாயிஸுக்கும் சம்பந்தமா?

கொழும்பு, மார்ச்21

புத்தளத்தில் அண்மையில் நடந்த படுகொலை, துப்பாக்கிச்சூடு, தீவைப்பு அனர்த்தங்கள் தொடர்பாக புத்தளம் பொலீஸ் மேலிடம் எடுத்த சில நடவடிக்கைகளை அடுத்து புத்தளம் வாசியும், புத்தளம் நகரசபையின் முன்னாள் தலைவரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான கே.ஏ.பாயிஸுக்கும் சம்பவங்களுடன் தொடர்பு உண்டா என்று சந்தேகம் எழுந்துள்ளது.

இது தொடர்பாக பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத், பிரதமர் ரணில் விக்கிர சிங்கவை சந்தித்துப் பேசினார். அதையடுத்து, சம்பவங்கள் பற்றிய முழு அறிக்கையை தமக்கு சமர்ப்பிக்குமாறு பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவை பிரதமர் பணித்திருக்கிறார்.

பாயிஸின் வீட்டிலிருந்து வான் ஒன்று கைப்பற்றப்பட்டது. சில பொலீஸ் சீருடைகளும், ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றையடுத்தே பாயிஸ் மீது பொலீஸார் சந்தேகம் கொண்டனர்.

வான் பயன்படுத்தமுடியாத நிலையில் இருந்தது. அது அமைச்சர் ரவூப ஹக்கீமின் பொறுப்பிலுள்ள துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமானது என்று கூறப்பட்டபோதிலும், உண்மையில் அது தனியார் ஒருவருக்குச் சொந்தமான வாகனம் என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பாயிஸின் பாதுகாப்புக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த பொலீஸ் உத்தியோகத்தர்களின் சீருடையும் ஆயுதங்களையுமே பொலீஸார் பாயிஸின் வீட்டிலிருந்து எடுத்தனர். இந்தத் தகவல்களை பாயிஸ் கட்சிக்கு அறிவித்திருக்கிறார் என்று முஸ்லிம் காங்கிரஸ் ஊடகப் பிரிவு தெரிவித்திருக்கிறது.

ஏற்கனவே பாயிஸை படுகொலை செய்வதற்கு முனைந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒரு கோஷ்டியினை பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டதை அடுத்து புத்தளத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்கள் குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலீஸார் தவறியுள்ளனர் என்றும் பாயிஸ் கட்சிக்கு அறிவித்துள்ளார்.

(ஐ)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்கள் அன்பளிப்பு

மாகாண சுகாதார சேவைகளின் கிளிநொச்சிப் பிரதிப் பணிப்பாளர் பிரிவுக்குரிய வைத்தியசாலைகளுக்கென மூன்று அம்புலன்ஸ் வாகனங்களை 'யுனிசெவ்' நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் மல்லாவி திட்டப்பணிப்பாளர் திருமதி பெனி புறூனின் ஏற்பாட்டையடுத்து மூன்று அம்புலன்ஸ் வாகனங்கள், அசுத்த நீர் அகற்றப் பயன்படும் வாகனம், குளிர் சாதனப் பெட்டிகள், ஒவ்வொன்றும் 15 குதிரை வலுக்கொண்ட 3 மின் பிறப்பாக்கிகள், கட்டில்கள் மற்றும் மெத்தைகள் என்பவற்றை 'யுனிசெவ்' நிறுவனம் வழங்கியுள்ளது.

இதுவரை காலமும் கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பிரிவுக்குரிய வைத்தியசாலைகளில் நிலவிய அம்புலன்ஸ் வாகனப் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறை என்பன இதனால் பெருமளவு நீங்கியுள்ளதாக, கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஒ-8)

## நீங்காத நினைவுகள்
## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நிறைவு

மண்ணின் மைந்தன்
01 - 06 - 1924



விண்ணின் மைந்தன்
21 - 03 - 2002

### அமரர் கொ.அந்தோனிமுத்து

எங்கள் குலவிளக்காய், குடும்பத்தின் ஒளிச்சுடராய் ஒளிவீசி எங்களையெல்லாம் பண்போடும், பாசத்தோடும் வளர்த்து நேசத்தோடு வாழ்வூட்டி வழிகாட்டி வாழவைத்த தந்தையே! அநீதிகளைக் கண்டித்து உண்மைகளை எடுத்துரைத்து சமுதாயத்திற்கும், மாணவச் செல்வங்களுக்கும் வாழ்ந்து காட்டினீரே!

கொடுக்கப்பட்ட பொறுப்புக்களில் சேவைச் செம்மலாய் செயலாற்றினீரே!

நன்றி உணர்வுடன நீ இறைவன் பாத நிழல் காண மன்றாடுவோம்.

*21,டேவிற் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(15770)

பிரிவால் துயருறும்:
மனைவி,
பிள்ளைகள்.

## சமூகக்கல்வி போட்டிகளில் முதலிடம்

இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவன் குட்டித்தம்பி குணாளன் அகில இலங்கை ரீதியிலும் தேசிய ரீதியிலும் நடைபெற்ற சமூகக்கல்வி பொது அறிவுப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றார்.



கு.குணாளன்

இவற்றிற்குரிய தங்கப் பதக்கங்களும், சான்றிதழ்களும் அண்மையில குருநாகலில் உள்ள மணிகத்தேவ பெண்கள் தேசியப் பாடசாலையில் இடம்பெற்ற விழாவில் மனிதவள அபிவிருத்திக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சரின் செயலாளரிடமிருந்து அவர் பெற்றுக் கொண்டார். (ஒ-5)

## பற்றுச்சீட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,மார்ச்21

அஞ்சல் அலுவலகங்களில் மின்சாரக் கட்டணங்களை அறவிடுவதற்கான பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் யாழ். அஞ்சல் திணைக்களத்திற்கு மின்சாரசபையால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மின்சாரசபையினர் 100 பற்றுச்சீட்டுப் புத்தகங்களை வழங்கியுள்ளதாகவும் -

மேலும் 100புத்தகங்களை விரைவில் வழங்குவதாக உறுதியளித்திருப்பதாகவும் - அஞ்சல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-12)

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 26 - 04 - 1926



மறைவு: 08 - 04 - 1985

### அமரர் சின்னையா மார்க்கண்டு


திதி: 21-03-2003

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதான வீதி,*
*சங்கானை கிழக்கு.*
(15777)

அன்பு மனைவி, சகோதரன்,
சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிமார், மருமக்கள்.

## 14ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



விடுதலைப் போராளி

### செல்வன் தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா

(லெப்டினன்ட் சிறைவாசன் "சிறை")

தாயின் மடியில்
24-11-1967

தாயக மண்ணில்
21-03-1989

*மல்லாகம்.*
(15775)
- குடும்பத்தினர்.


# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 40**

இறுதி ஆட்டத்தில் ஆஸி அணி வெற்றிபெறுமா?

முழுப்பெயர் : ..................................

முகவரி : ..................................

அ. அட்டை. எண்: ..................................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (22.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 40 , உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்

'அருண்ஸ்' பரிசுக் கூப்பன்களை வெல்வதற்கான கேள்விகள் விரைவில்...!




**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல்நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

உதயன்

# ஈராக் யுத்தம்

ஈராக்மீது அமெரிக்கா கங்கணம் கட்டியவாறு போரை ஆரம்பித்துவிட்டது. தானே உலகின் தலைமைக் காவலன் என்று கருதிக்கொள்ளும் அமெரிக்கா, தற்போது தாக்குதல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளது.

இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வர ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி ஆகியவற்றின்மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசிப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியமை வரலாற்றில் இடம் பெற்றுள்ள செய்தி. மற்றோர் அழிவு வரலாற்றைப் படைக்கவா புஷ்ஷின் நிர்வாகம் தற்போது ஈராக்மீது தாக்குதலை ஆரம்பித்திருக்கிறது என்று உலகெங்கும் கேள்வி எழுப்பப்படுகிறது.

உலக நாடுகள் பலவும் ஓரணியில் நின்று முதலில் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்தன. ஆனால், பிரிட்டனும், ஸ்பெயினும் அமெரிக்காவுக்கு ஆதரவுக் கரம் நீட்டின.

அதன்விளைவாக பிரிட்டிஷ் பிரதமர் பிளேயரின் பதவி ஆட்டங்கண்டது. அவருடைய அமைச்சர்கள் மூவர் இராஜினாமாச் செய்துள்ளபோதிலும் பிளேயர் தப்பிவிட்டார். அவர்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரின் தயவால் தோல்வி கண்டது. அதனால், அவர் பிழைத்தார். என்றாலும், பிரிட்டிஷ் மக்களின் எதிர்ப்பு வலுத்துவருகிறது. அமெரிக்காவிலும் மக்கள் ஈராக் யுத்தத்திற்கு எதிராகக் கொதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

நாட்டுமக்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாமலும் சர்வதேச சட்டங்களை மதிக்காமலும், ஐ.நா.பாதுகாப்புச் சபையின் அங்கீகாரத்தைப் பெறாமலும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தன்னிச்சையாக ஈராக்மீது யுத்தம் தொடுத்திருக்கிறார்.

பிரான்ஸ், ஜேர்மன், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் அதை வன்மையாக எதிர்த்து வருகின்றன. அந்த நாடுகள் அமெரிக்காவின் போர் தொடுப்பிற்கு எதிராக இனி என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்துத் தீவிரமாக ஆலோசனை நடத்திவருகின்றன.

ஈராக்கின் எண்ணெய் வளத்தின்மீது கண்வைத்துக் கொண்டு, அந்த நாட்டை விழுங்கத் துடிக்கிறது அமெரிக்கா. ஜப்பான் நகரங்களையும் ஆப்கானிஸ்தான் நகரங்களையும் சாம்பல் மேடாக்கியதுபோல் ஈராக் முழுவதையும் ஆக்கிவிடுமோ என்ற அச்சம் உலகம் முழுவதிலும் நிலவுகிறது.

உலகிற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பயங்கர ஆயுதங்களை எவ்வளவு சொல்லியும் ஈராக் முற்றாக அழிக்காமல் இருக்கிறது. அந்த ஆயுதங்களை அழித்து உலகை ரட்சிப்பதற்காகவே போர் என்று அமெரிக்கா கூறிக்கொண்டு நாசச் செயலில் ஈடுபட்டுள்ளது.

பல வருடங்களாக ஈராக்மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்தும் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனும் அவரது புதல்வர்களும் அமெரிக்காவின் ஆணைக்குக் கட்டுப்பட மறுத்துவருகிறார்கள். அவர்களை ஈராக்கிலிருந்து ஓடிவிடும்படி 48 மணிநேரக் காலக்கெடு விதித்தும்கூட அவர்கள் மசியவில்லை.

அவர்களைப் பழிவாங்குவதற்காக போர் தொடுத்து ஈராக்கிற்கு அழிவையும் மக்களுக்கு அவலங்களையும் ஏற்படுத்துவதா?

போரினால் ஈராக்கிற்கு மட்டுமா பாதிப்பு? இலங்கை போன்ற பல நாடுகளுக்கும் பலவிதமான பாதிப்புகள் ஏற்படும். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் ஈராக் யுத்தம்மீது அதிக கவனம் செலுத்தத் தொடங்கினால் இலங்கை சமாதான முயற்சிகள்கூட மழுங்கடிக்கப்பட்டுவிடும்.

ஈராக் யுத்தம் உலக யுத்தமாக வெடிக்கும் அபாயமும் உண்டு. என்ன ஆனாலும் சரி, போரை எதிர்கொள்வேன் என்று சதாம் ஹுசைன் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நிற்கிறார். தனது இரண்டு மகன்களையும் போருக்கான கட்டளைத் தளபதிகளாக நியமித்துள்ளார்.

பல வல்லரசு நாடுகள், மத்திய கிழக்கு அரபு நாடுகள் ஆகியவற்றின் ஆதரவும் உலக முஸ்லிம் சமுதாயம் உட்படக் கோடிக்கணக்கான மக்களின் ஆதரவும் ஈராக்கிற்கு உண்டு. என்றாலும், அமெரிக்காவின் படைபலத்திற்கு ஈராக்கினால் தாக்குப்பிடிக்க முடியுமா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

யுத்தத்தில் இலகுவாக வெற்றி பெறுவதற்கு ஜனாதிபதி புஷ் மற்றொரு யுக்தியையும் கையாளுகிறார். சதாம் ஹுசைனையும் அவரது மகன்களையும் மக்களைக் கொண்டே விரட்டியடிப்பதற்கான தந்திரம் அது.

அமெரிக்க உதவியுடன் ஈராக் கட்டியெழுப்பப்படும். அங்கே பாலும் தேனும் கலந்து ஓடும். எல்லோரும் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் சந்தோஷமாகவும் வாழலாம் என்று ஈராக் மக்களுக்கு ஜனாதிபதி புஷ் ஆசைகாட்டிப் பார்த்தார். ஈராக் மக்கள் அதில் ஈடுபடவில்லை.

அந்த முயற்சியில் ஜனாதிபதி புஷ் தோல்வி கண்டார். எந்தப் போர்க் கஷ்டத்தையும் அனுபவிக்க ஈராக் மக்கள் தயாராகிவிட்டார்கள். இன்று ஆயுத பலத்தை விட மக்கள் சக்தியே ஜனாதிபதி ஹுசைனுக்குப் பெரிய பக்கபலமாக உள்ளது. போரைத் தவிர்க்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எல்லாம் ஜனாதிபதி புஷ்ஷின் திமிரால் பலன் அளிக்கவில்லை. முடிவைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டியதுதான்.

# 'கவரிங்' நகையை அடகு வைத்து பணம்பெற பெண்மணி முயற்சி!

வலி.மேற்கு,மார்ச்21

சங்கானை மக்கள் வங்கியில் தங்கச் சங்கிலி என்று கூறி 'கவரிங்' நகையை பெண்மணி ஒருவர் அடகு வைத்துப் பணம் பெற முயற்சித்ததாகக் கூறப்படுகிறது.

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த 51வயதுடைய பெண்மணி ஒருவர் சங்கிலி ஒன்றை அடகுவைத்து பணம்பெறுவதற்கு முயற்சி செய்தார். சந்தேகம் கொண்ட வங்கி உத்தியோகத்தர் வங்கி முகாமையாளரின் கவனத்துக்கு இதனைக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து சங்கிலி கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. இதில் அச்சங்கிலி தங்கமுலாம் பூசப்பட்ட நகை என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட பெண்மணியை முகாமையாளர் விசாரணை செய்தபோது தனது தங்கையாரின் சங்கிலி அதுவென்றும் -

சிங்கப்பூரில் இருந்து உறவினர் ஒருவர் கொண்டுவந்து அச்சங்கிலியைக் கொடுத்ததாகவும் - அவர் தெரிவித்தார்.

வங்கி முகாமையாளர் இச்சம்பவம் குறித்து சங்கானைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.(ஒ-175)

# மாதர் மான்மியம்

## பய + பக்தி

பூட்டாத சயிக்கிள் தன்னை
பூவையோ வெளியே விட்டு
உட்புகுந்து ஆலயத்துள் சென்று
உத்தமி பூசை காண சென்றாள்
எட்டி யெட்டி பல முறையும்
என்னாச்சு சைக்கிளுக்கென்று
விட்டு விட்டு ஓடி வந்து
வித்தகி வெளியே பார்த்தாள்
இட்டம் போல் பூசை தன்னை
இவள் காண முடியவில்லை
பட்ட இப்பாட்டைக் கண்டேன்
பய + பக்தியை அறிந்து கொண்டேன்.

- விகடகவி.

# தவறான மொழிபெயர்ப்புகளால் பாடசாலைக்கு ஏற்பட்ட தொல்லை!

## மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் விவரிப்பு

மண்டைதீவு,மார்ச்21

பாடசாலை நிகழ்வுகள் பதிவுசெய்யப்பட்டு தவறாக மொழி பெயர்க்கப்படுவதால் பாடசாலைகள் வீணான தொல்லைகளை எதிர்நோக்க நேரிடுகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன். அன்னை பூபதி நினைவுதினம் தொடர்பாக வேலணையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் இது பற்றித் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளில் உயர்தர மாணவர்கள் ஒன்றுகூடல் நிகழ்வுகளை நடத்துவது வழமையான ஒன்றாகும். இந்த நிகழ்வுகள்கூட ஒலிப்பதிவு செய்யப்படுகின்றன. பின்னர் அதனை முழுத் தவறாக மொழிபெயர்த்துவிட்டு, அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு தொல்லைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற ஒரு சம்பவம் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். அங்கு பல இடையூறுகளின் மத்தியில் உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நடத்தப்பட்டது. அதில் 'எழுச்சிப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன.

அவற்றில் ஒரு பாடல் 'தளராத துணிவோடு களமாடினாய்' என்ற வரிகளைக் கொண்டிருந்தது. இந்த வரியின் இறுதிப் பகுதியில் உள்ள 'னாய்' என்ற பகுதியை 'நாய்' என்று கருதி 'பல்லா' என்று மொழிபெயர்க்கப்பட்டது.

இதை வைத்துக்கொண்டு அயலில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களை 'நாய்' என்று கேலி செய்ததாக விசாரணை நடத்தப்பட்டு பாடசாலைச் சமூகம் தொல்லைகளுக்குள்ளாகியது.

எமது கல்விக்கு சமாதான காலத்தில் இவ்வாறான தொல்லை ஏற்படுகிறது. இது குறித்து பாடசாலைகளும், அதிபர்களும் கவனமாக இருக்கவேண்டும் - என்றார் அவர்.

(ஒ-86-88)

# அன்ரன் பாலசிங்கம் புலிகளின் பேச்சாளர் மட்டுமல்ல அரசாங்கத்தினதும் பேச்சாளரும்கூட

## நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்21

தற்போதைய அரசு கலைக்கப்பட்டு சமாதானப் பேச்சுகள் இடையில் தடைப்படுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தால் அதற்கெதிரான அடுத்த செயல் என்னவென்பதில் நாம் உறுதியாகவே இருக்கின்றோம் என விடுதலைப் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் ஜப்பானில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பேச்சாளராக மட்டும் அன்ரன் பாலசிங்கம் செயற்படவில்லை. அரசின் பேச்சாளராகவும் அவரே செயற்படுகின்றார் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

வருமானவரி திருத்தச்சட்ட விவாதத்தில் உரையாற்றிய பொ.ஐ.மு.உறுப்பினர் நிமால் ஸ்ரீபால டி சில்வா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாம் ஆட்சியை உங்களிடம் ஒப்படைத்தபோது வாழ்க்கைச் செலவு 196 சதவீதமாக இருந்தது. அது தற்போது மும்மடங்காக அதிகரித்துள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கமைய சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை. அரசு இவ்விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் - இவ்வாறு அவர் தெரிவித்தார்.(ஐ)

# இயக்கத்தில் சேரவந்த சிறுவன் பெற்றோரிடமே மீள ஒப்படைப்பு

தென்மராட்சி,மார்ச்21

விடுதலைப் புலிகளுடன் இணையச் சென்ற 16 வயதுச் சிறுவன் புலிகளால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் கடந்த திங்கட்கிழமை தென்மராட்சியில் இடம்பெற்றது.

வரணி குடமியனைச் சேர்ந்த மேற்படி சிறுவன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையவந்தபோது அரசியல்துறையைச் சேர்ந்த ஸ்ரார் என்பவர் அச்சிறுவனை அறிவுரை கூறி வீட்டுக்குச் கூட்டிச்சென்று பெற்றோரிடம் ஒப்படைத்தார்.(ஒ-117)

### குடிசைகள் அமைத்துக்கொடுக்கத் திட்டம்

# சங்கானையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு ஐ.நா. உதவி

வலி.மேற்கு,மார்ச்21

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் வன்னியில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மலசல கூடங்களையும் தற்காலிக குடிசைகளையும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் அமைத்துக்கொடுக்கவுள்ளது.

இந்த இரண்டு திட்டங்களையும் மேற்கொள்வதற்கு 17 லட்சத்து 34 ஆயிரத்து 500 ரூபா நிதியை அந்நிறுவனம் ஒதுக்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு இந்நிறுவனத்தினர் மேற்கொள்ளவுள்ள திட்டங்களுள் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 60 மலசல கூடங்களும், 50 தற்காலிக குடிசைகளும் அடங்குகின்றன. பொன்னாலை, சுழிபுரம், தொல்புரம் ஆகிய கிராமங்களில் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்காலிக குடிசைகளை அமைப்பதற்கு 7 லட்சத்து 69 ஆயிரத்து 500 ரூபாவும் மலசல கூடங்களை அமைப்பதற்கு 9 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும் அந்த நிறுவனத்தினரால் செலவிடப்படவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (175)

### நாளை

பங்குனி 08
சனிக்கிழமை
(22.03.2003)
திதி : சதுர்த்தசி
முற்பகல் 7.53வரை.
பஞ்சமி வைகறை
5.36வரை.
நட்சத்திரம்: விசாகம்
முன் இரவு 9.32வரை.
சுபநேரம் : 3.17 - 4.47
ராகுகாலம்: 9.17 - 10.47
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

சரியான வழியில் பெறப்படாத மகிழ்ச்சி கேடு விளைவிக்கும்.

# வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியமர்வை தனியே ஆராய்ந்து தீர்வுகாண வேண்டும்!

## ஜப்பான் பேச்சுகளில் அமைச்சர் ஹக்கீம் வலியுறுத்தல்

வட மாகாண முஸ்லிம்களின் மீள்குடியமர்வு விடயம் தனியே நோக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஜப்பானில் நடைபெறும் சமாதான பேச்சுகளின் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் வலியுறுத்தினார்.

மீள்குடியமர்வு புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றி நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டபோதே அமைச்சர் ஹக்கீம் இந்த வேண்டுகோளை விடுத்ததோடு, வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கு போதிய உதவிகள் வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடியமர்வுக்கு வாய்ப்பாக மாவட்ட மட்டத்தில் தனித்தனியே குழுக்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும் அக்குழுக்களில் முஸ்லிம்களின் பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பதன்மூலம் சுமுகமான முறையில் பிரச்சினைகளை அணுகி அவற்றிக்கு உடனுக்குடன் உரிய தீர்வுகளைக் காணமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின்போது வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியமர்வுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாகவும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் அமைச்சர் ஹக்கீம் தலைமையிலான குழுவினர் ஜப்பானின் விசேட பிரதிநிதி யகசி அகாஷியுடன் விசேட கலந்துரையாடலொன்றையும் நடத்தவுள்ளனர். (ஒ)

# வங்கியாளர் வீட்டில் கொள்ளை முயற்சி: பாதுகாப்புக் குழுவினரால் முறியடிப்பு!

மன்னார்,மார்ச்21

மன்னார் நகரப்பகுதியில் வங்கி ஊழியர் ஒருவரின் வீட்டிற்குள் நுழைந்து கொள்ளையிடுவதற்கு கொள்ளையர்கள் மேற்கொண்ட முயற்சியை பாதுகாப்புக் குழுவினர் முறியடித்தனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

வங்கி ஊழியர் ஒருவரின் வீட்டினுள் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் நுழைந்த மூன்று பேர் கத்தியைக் காட்டி மிரட்டி வங்கி ஊழியரின் மனைவியின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்து எடுத்ததுடன் பொருள்களையும் கொள்ளையிடுவதற்கு முனைந்துள்ளனர்.

அப்போது அந்தப் பெண் கூச்சலிடவே, மன்னார் பொலீஸாரினால் அமைக்கப்பட்ட பாதுகாப்புக் குழுவின் அங்கத்தவர்கள் அவ்விடத்துக்கு வரவே மூவரும் தப்பியோட முயன்றுள்ளனர்.

தப்பியோடுவதற்கு முயன்ற மூவரில் ஒருவரை பாதுகாப்புக் குழுவினர் மடக்கிப் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் மன்னாரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர் ஒருவரது பாடசாலை அடையாள அட்டை ஒன்று பொலீஸாரினால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தப்பிச் சென்றவர்களில் ஒருவர் கொழும்பு, கொச்சிக்கடைப் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மூவரும் மாணவர்களாக இருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர். மேலதிக விசாரணைகளை பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

III PRESIDENT



PRESIDENT CFL
பல்புகள் தற்போது இலங்கை தர நிர்ணய சபையின் (SLSI) சிறந்த மின்சார சேமிப்பை உறுதிபடுத்தும் நட்சத்திர தராதரத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது, என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

அத்துடன் இலங்கை மின்சார சபையின் இலகு தவணை திட்டத்திலும் கிடைக்கும்

80% சேமிப்பு

குடா நாடெங்கும் கிடைக்கும்

ISO 9002

கலைவிழாக்கள் ~ திருவிழாக்கள் மற்றும் பெருவிழாக்களுக்கு
அழைத்து மகிழுங்கள்



வில்லிசைப் பிரியர்களுக்கொரு நல்விருந்து
கொடிகாமம்
கலைமகள் வில்லிசைக் குழு

விவரங்களுக்கு:
A.V.M. போட்டோ கலையகம்
A- 9 வீதி, கொடிகாமம்
(பெற்றோல் செற் அருகில்).
T.P.: 070 - 212747

பழைய. புதிய பாஸ்ப்போட். தேசிய அடையாள அட்டை.
லைசன்ஸ் போட்டோ. அஞ்சல் அடையாள அட்டை
படங்கள் யாவும்

① ஒரு மணித்தியாலத்தில் எடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் உட்புற வெளிப்புற கலர் படப்பிடிப்புகளும்
A.V. மூர்த்தி, புகையிரத நிலைய வீதி, கொடிகாமம்.

(15684)

நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா?

திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய

சுதந்திர வேட்கை

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ரசமான பல சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

உதாரணத்திற்கு இதோ:-

"ஆயுதப் போராட்டத்தில் பங்குகொள்வது குறித்து தமக்கு முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி பெண் போராளிகள் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. இலட்சியத்தில் உறுதியாக நின்ற அவர்கள், இந்த எதிர்ப்பு அலைகளை தன்நம்பிக்கையோடும் பெருந்தன்மையோடும் முகங்கொடுத்தார்கள். இதேவேளை போராட்டத்தில் பெருந்தொகையான இளம் பெண்கள் இணைந்தார்கள், பெற்றோர்களுக்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி காலப்போக்கில் தணிந்து போனது. பெண்களும் போராட்டத்தில் பங்குகொள்ளும் யதார்த்த புறநிலையைத் தம்மால் மாற்றிவிட முடியாது என உணர்ந்த அவர்கள், நிலைமையை ஏற்றுக்கொண்டார்கள். எனவே, ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் பங்குகொள்வது என்பது தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபாகிவிட்டது. பலர் எதிர்பார்த்ததுபோல அன்றி எச்சரித்தது போல தமிழ்ப் பண்பாடு சீர்குலையவில்லை."

*இதே போல் இன்னும் பல சம்பவங்கள்*
*இனியும் தாமதிக்காதீர்கள்*

உதயன் பத்திரிகை முகவர்களிடமும்,
பிரபல புத்தக நிலையங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

பக்கங்கள்: 479 விலை 500/-

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் மழலையாக 16 - 10 - 1980



ஆழியின் மடியில் காவியமாக 07 - 02 - 2003

### கப்டன் பொதிகைத்தேவன்
### சிவஞானஸ்கந்தமூர்த்தி தயாபரன்

*புலோலி, தெற்கு, புலோலி.*

புன்னகை பூத்திருந்தோம் புரிந்துணர்வு போர் நிறுத்தம் என
புயலாக வந்த சேதி பொய்யாகிப் போகாதோ?
உண்மையென அறிந்ததுமே ஆலையிலிட்ட கரும்பானோம்
களமதிலே மடியவில்லை கடத்தாலெமைப் பிரிந்தீர்
கங்காணி செய்த பிழையிதுவோ சண்டாளி செய்த சதியிதுவோ?
கலக்குதையாயெமது நெஞ்சம் கலங்குகிறோம் உமைப் பிரிந்து
அன்னையவள் ஈன்றிடவே அண்ணனவன் வளர்த்துவிட்டான்
ஆழிக்குமரனவன் ஆயகலை செப்புவித்தான்
அந்நியருக்குப் பணியாத தாரக மந்திரத்தை
அண்ணனவன் உமக்குப் பயிற்றுவிக்க
ஓங்கி ஒலித்திட்டீர் உமையீந்தீர் ஈகமதாய்
தமிழர் தேசமுள்ளவரையும் உன் நாமம் பொறிபடுமே!

புலோலி தெற்கு வடுவாவத்தை வீரபத்திரர் ஆலயத்தில் 23.03.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.சி.மூர்த்தி (அரசன்)
(தந்தை)
புலோலி

- குடும்பத்தினர்.

(15744)

## மரண அறிவித்தல்

### முத்துக்குமார் மயில்வாகனம்

(கிராம சேவையாளர், அரியாலை J/96)

அரியாலை, அருளம்பலம் வீதியைச் சேர்ந்த முத்துக்குமார் மயில்வாகனம் அவர்கள் (17-03-2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமார்-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தங்கலெட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்துரை-செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் நிர்மலா, மஞ்சுளா, அமித்தனா, மேகலா, சசிகலா, பிரமிளா, வாசுகன், தர்மிளா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிவபாலச்சந்திரன் மகேந்திரராஜா, ராஜகோபால், தவேந்திரன், நிமலதாஸ், ரமேஷ் ஆகியோரின் மாமனாரும் கமலாம்பிகை, ஜெகதாம்பாள் கிருஸ்ணசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற ஐயாத்துரை, காலஞ்சென்ற தேவகடாச்சம், கமலினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22-03-2003) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

588/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(15773)

தகவல்:
ம.தங்கலெட்சுமி
(மனைவி)

# உள்நாட்டில் வாகன உற்பத்தியில் துணிவுடன் இறங்கிய "அல்பா லங்கா"

## தரமான "ஆட்டோ" வண்டிகளைத் தர எம்.வை.எம்.நஸார் உறுதி



ரி.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் எம்.வை.எம்.நஸாரை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக்கொண்ட சிலிங்கோ குறுப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரி.என்.எல்.தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 18ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினர் தொழில் அதிபர் எம். வை. எம்.நஸார்.

உள்நாட்டில் வாகனங்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை. வெளிநாட்டு வாகனங்களையே நாம் இறக்குமதி செய்கிறோம்.

இந்த நிலையை மாற்றி அமைக்கும் விதத்தில் முச்சக்கர ஆட்டோ வண்டிகளை உற்பத்தி செய்தா அல்பா லங்கா நிறுவனத்தின் உரிமையாளரான எம்.வை.எம்.நஸார். முதல் முறையாக இலங்கையில் இவர் வாகன உற்பத்தியில் ஈடுபட்டார்.

வெளிநாட்டு வாகன உற்பத்தியாளர்களுடன் இவர் போட்டியிருகிறார். எல்லா இனத்தவர்களும் ஒன்றாக இணைந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். விவசாயம், கைத்தொழில் ஆகிய இரு துறைகளிலும் நாடு அபிவிருத்தி காண வேண்டும் என்கிறார் தொழிலதிபர் எம்.வை. எம். நஸார்.

ரி.என்.எல்.தொலைக் காட்சியில் தொழில் அதிபர் எம்.வை.எம்.நஸாரை அறிவிப்பாளர் சமுதிகசமரவிக்ரமவும், 113 கம்பனி களைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:-* வாகனம் ஒன்றை இலங்கையில் உற்பத்தி செய்வது எனபது இலகுவான காரியமல்ல. இச்சவாலை எவ்வாறு ஏற்றுக்கொண்டீர்கள்?

*பதில்:-* சவூதி அரேபியாவில் வேலை செய்துவிட்டு நாடு திரும்பிய போது எனது சொந்த வியாபாரத்தை ஆரம்பித்தேன். பின்பு அல்பா ஆட்டோ டிரேடர்ஸ் என்னும் பெயரில் வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் கடை ஒன்றை ஆரம்பித்தேன். வாகன உதிரிப்பாகங்களை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்தோம்.

அப்போதுதான் நாம் இறக்குமதிகளுக்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகிறோம் என்பது எனக்குப் புலப்பட்டது. இந்தத் தொகையைக் குறைப்பதற்கு ஏதாவது வழி தேடினேன். அப்போதுதான் முச்சக்கர ஆட்டோ வண்டிகளை உற்பத்தி செய்யவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. பின்னர் சிறிதுசிறிதாக அந்தத் தொழிலை ஆரம்பித்தேன்.

2001ஆம் ஆண்டில் முச்சக்கர ஆட்டோ வண்டிகளின் உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்தேன். அதில் இருந்த ஆர்வம் காரணமாக எந்த விதமான கஷ்டத்தையும் நான் உணரவில்லை. அதேவேளை, குறைந்த விலையில் அதைச் செய்யலாம். அத்துடன் ஏனைய முச்சக்கர வண்டிகளில் உள்ள குறைபாடுகளை நாம் தவிர்த்துக்கொள்ளும் வகையில் எமது வாகனங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. குறிப்பாக ஆட்டோ வண்டியின் இருக்கைகளில் நாம் கவனம் செலுத்துகிறோம்.

தேசாபிமானம் காரணமாக நான் இந்த உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டேன். எமது நாட்டுத் தேவைகளுக்காக நாமே பொருள்களை உற்பத்தி செய்யும்போது எப்படியும் தீவிரம் இருக்கும்தானே? பணம் இல்லாமல் ஒன்றும் செய்யமுடியாது என்பது உண்மை. எனக்குப பணம் விஷயத்தில செலான் வங்கி பல வழிகளில் உதவியுள்ளது.

உற்பத்திகளுக்கான கடன் வட்டி வீதம் அதிகமாக உள்ளது. நூற்றுக்கு 25 சதவீதமானோர் உற்பத்தியாளர்கள். இவர்கள் மீது அதிக சுமை சுமத்தப்படுகின்றது. இது குறைக்கப்பட வேண்டும். நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சந்தித்து முடிவு எடுக்கப்படவேண்டும்.

*கேள்வி:-* பொதுவான வட்டி வீதம் எவ்வளவு?

*பதில்:-* கைத்தொழிலுக்கு கடன் பெற்றால் 13 சதவீதம் வட்டி அறவிடப்படுகிறது. இதைவிடக் குறைந்த தொகையையே எதிர்பார்க்கிறோம். வெளிநாடுகளில் வட்டி முறைகளைப் பற்றி ஆராய்ந்து இது விடயத்தில் மத்திய வங்கி முடிவு எடுக்கவேண்டும்.

*கேள்வி:-* உங்கள் உற்பத்திகளுக்கான கேள்வி எப்படி இருக்கிறது?

*பதில்:-* ஆரம்பத்தில் மாதாந்தம் நான்கு வண்டிகளையே உற்பத்தி செய்தோம். ஏழு மாதங்களில் 30 வாகனங்களை மாதாந்தம் உற்பத்தி செய்யக்கூடியத்ாக இருந்தது. இந்த வருட இறுதிக்குள் 200 வாகனங்களை உற்பத்தி செய்யமுடியும். 1,500 வாகனங்களுக்கு சந்தையில் கேள்வி நிலவுகிறது. எமது பொருள்களில் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால, அவற்றைச் சுட்டிக்காட்டும் உரிமை வாடிக்கையாளருக்கு உள்ளது.

*கேள்வி:-* சவூதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பியபோது உங்களிடம் எவ்வளவு பணம் இருந்தது?

*பதில்:-* சுமார் 30 லட்சம் ரூபா இருந்தது.

*கேள்வி:-* நீங்கள் ஒரு தேசாபிமானி. அதிகாரத்தில் இருப்பவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

*பதில்:-* எனக்கு மட்டும் என்று நான் எதையும் கேட்கவில்லை. என்னால் மட்டும் இந்த நாட்டைத் திருத்தவும் முடியாது. எல்லாம் பொதுவான பிரச்சினைகள்தான். நாட்டின் கைத்தொழில் மற்றும் விவசாயம் ஆகிய இரண்டு துறைகளிலும் அபிவிருத்தி காணவேண்டும். அதைவிடுத்து பாதை அமைத்து பாலம் கட்டுவதில் மட்டும் நின்றுவிட்டால் நாடு முன்னேறாது. நான 40 நாடுகளுக்கு விஜயஞ்செய்துள்ளேன். ஆனால், இலங்கையைப் போன்று சிறப்பான ஒரு நாட்டைக் காணவில்லை. அதை எமது நாட்டவர்கள் உணர்வதில்லை. சாதி, மத பேதத்தால் அர்த்தமில்லை. நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நாட்டிற்கு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

*கேள்வி:-* இஸ்லாமிய முறையிலான நிதி நிறுவனம் ஒன்றை ஆரம்பித்துள்ளேன்?

*பதில்:-* ஆம். அது ஒரு நல்ல விடயம்.

*கேள்வி:-* அவ்வாறு நினைக்கிறீர்களா?

*பதில்:-* நிச்சயமாக, அப்போது வர்த்தக சமூகம் ஒன்றிணையும். வங்கி நடவடிக்கைகளில் அவர்களும் ஈடுபடுவார்கள். எனினும், நாம் அனைத்து விடயங்களையும் ஒரே நாட்டவர்கள் என்ற நோக்கில் பார்க்கவேண்டும். பேதங்களும் வேறுபாடுகளும் தேவையற்றவை. நாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு வாழப்போவதில்லை. வாழும் சில ஆண்டுகளுக்குள் பேதங்கள் தேவையற்றவை.

*கேள்வி:-* உங்கள் முச்சக்கர வண்டிகளின் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?

*பதில்:-* ஆரம்பத்தில் 1,75,000 ரூபாவுக்கு விற்பனை செய்தேன். ஆனால், தற்போது வரியுடன் சேர்த்து 1,65,000 ரூபாவுடன் விற்பனை செய்கிறோம். சில உற்பத்திப் பொருள்களின் விலை உயர்வாக இருக்கிறது. இல்லையேல் இதைவிட மலிவு விலைக்கு விற்பனை செய்ய முடியும்.

- இவ்வாறு எம்.வை.எம்.நஸார் தெரிவித்தார்.

# மக்கள் மீள்குடியமர்வுத் திட்டத்துக்கு 8 கிராமங்கள் முதற்கட்டமாகத் தெரிவு

வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் எட்டுக் கிராமங்கள் மக்கள் மீள்குடியமர்வுக் கிராமங்களாக முதல் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான செயற்குழு (சிரான்) மக்கள் மீள்குடியமர்வுத் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கில் 46 கிராமங்களை இனங்கண்டுள்ளது.

அவற்றில் மாவட்டத்துக்கு ஒரு கிராமமாக எட்டுக் கிராமங்களில் மக்களைக் குடியமர்த்தும் முதல் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரண்டாயிரம் குடும்பங்களை மீள் குடியமர்த்தும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்றுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படும்.



ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் முதலாவது சமுர்த்தி வங்கி அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. வங்கிக் கட்டடத்தை யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் எஸ். சிவபாதசுந்தரம் நடாவெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (ஒ-73)

மீளக்குடியமரும் குடும்பம் ஒன்றுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபாவையும் வீடமைப்புக்கு ஒரு தொகையையும் அரசு வழங்கும். அத்தொகையைக் கொண்டு வீடு அமைக்கும் பணியை குடும்பத்தினர் மேற்கொள்வர்.

அந்தக் கிராமத்தில் வீதிப் புனரமைப்பு, குடிதண்ணீர் வசதி அளித்தல், அடிப்படைச் சுகாதார வசதி அளித்தல் போன்ற பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செய்துகொடுக்கும்.

அத்துடன் மீள்குடியமரும் குடும்பத்துக்கு வருமானத்தை ஈட்டக் கூடிய வகையில் கடன் வழங்கும் திட்டம் ஒன்றையும் அந்த நிறுவனம் நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

மீள்குடியமர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 46 கிராமங்களிலும் இருநூறு கோடி ரூபா செலவில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும்-

இத்திட்டங்களுக்கு ஆரம்ப கட்டமாக 50 கோடி ரூபா 'சிரான்' அமைப்பால் வழங்கப்பட்டுள்ளது என்றும் - தமிழர் புனர்வாழ்வு கழகப் பொறுப்பாளர் ரெஜி தெரிவித்தார்.

மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்கள் வருமாறு:-

யாழ்ப்பாணம் - ஆழியவளை, கிளிநொச்சி - தம்பகாமம், முல்லைத்தீவு - உப்புமாவெளி, மன்னார் - சொர்ணபுரி, வவுனியா - கல்மடு, திருகோணமலை - மாங்காய் ஊற்று, மட்டக்களப்பு - பெரியபுல்லுமலை, அம்பாறை - தங்கவேலாயுதபுரம். (ஒ-3)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்து

கொழும்பு,மார்ச்21

செஞ்சிலுவை சர்வதேசக் குழு தனது பணிகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இவ்விடயம் தொடர்பாக செய்தியாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அதன் தலைவர் மார்க்கஸ் புருட்மன் கருத்துக் கூறியதாவது:-

செஞ்சிலுவை சர்வதேசக்குழு பல வருடங்களாக இலங்கையில் தனது சேவையை மேற்கொண்டு வருகிறது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு பல வழிகளிலும் துணை புரிந்துள்ளது.

1998ஆம் ஆண்டு வன்னிப் பகுதியில் ஆயிரக்கணக்கான நோயாளர்களுக்கு மருத்துவ உதவி வழங்கியுள்ளோம்.

எனவே, எதிர்காலத்தில் தொடர்ந்தும் சேவையாற்றுவதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளோம். இதன்மூலம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மேலும் பல உதவிகள் கிடைப்பதோடு, அது சர்வதேச அமைப்புக்களுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளமுடியும்.

ஒரு லட்சத்து இருபதாயிரம் உறுப்பினர்களுடனும் 25 கிளைகளுடனும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இயங்கிவருகிறது. அதை மேலும் விஸ்தரித்து சேவைபுரிய வேண்டும் என்பதே எமது ஒரே நோக்கமாகும் - என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஜகத் அபேசிங்க, செஞ்சிலுவை சர்வதேசக் குழு பிரதிநிதி சுனிச்சிகாமி ஆகியோரும் கலந்துகொண்டனர்.(ஜ)

## அஞ்சல் அலுவலருக்கு விசேட பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்21

புதிதாகப் பதவி உயர்வுபெற்ற அஞ்சல் அலுவலர்களுக்கு எதிர்வரும் 27ஆம் திகதிமுதல் அடுத்த மாதம் 10ஆம் திகதிவரை மட்டக்களப்பு அஞ்சல் பயிற்சி நிலையத்தில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

சிற்றூழியர்கள், உபதபால் அதிபர்களிடையே நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவான 34 பேருக்கு எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பு, மகரகம தேசிய இளைஞர் மன்ற மண்டபத்தில் ஊடகத்துறைத் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கீரால் உதவித் தபால் அதிபர் பதவிக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன. அதைத் தொடர்ந்து 27ஆம் திகதி இவர்கள் 34 பேருக்கும் மட்டக்களப்பு அஞ்சல் பயிற்சி நிலையத்தில் விசேட பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.(ஒ-12)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

21-03-2003

HAPPY BIRTHDAY



### ஜெயக்குமார் கீர்த்தனா

இளவாலையைச் சேர்ந்த **ஜெயக்குமார் – செல்வமணி** தம்பதிகளின் **செல்வப் புதல்வி கீர்த்தனா** தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (21.03.2003) வெள்ளிக்கிழமை இத்தாலியில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

கீர்த்தனாவை அன்பு அப்பா, அம்மா கோண்டாவிலில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, இளவாலையில் வசிக்கும் அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அத்தைமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், கோண்டாவிலில் வசிக்கும் பெரியம்மா, அண்ணா, கனடாவில் வசிக்கும் மாமா, அத்தை மச்சான், புத்தளத்தில் உள்ள பெரியம்மா, பெரியப்பா, அண்ணாமார், அக்கா, இத்தாலியில் வசிக்கும் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*கோண்டாவில்.* (15792) **தி.ரமேஸ்கரன் (அண்ணா)**



## இடமாற்றம் பற்றிய அறிவித்தல்

பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாயில் இயங்கிய **துர்க்கா கொமினிக்கேஷன், ரிஷி காளான் விற்பனை நிலையம்** ஆகியவை 20.03.2003முதல் கீழ்க்கண்ட முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

**Dr.ஈஸ்வரி கந்தையா**

மதவடி, சுதுமலை,
மானிப்பாய். T.P: 222 2554

(15793)



யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

சிரேஷ்ட இடைநிலை பிரிவு

## இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2003

தலைவர் : **திரு. அ.மு.அருணாசலம்** *(அதிபர்)*

காலம் : நாளை (22.03.2003) சனிக்கிழமை பி.ப. 1.45 மணி

பிரதம விருந்தினர் : **கௌரவ ந.இரவிராஜ்**
*(யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)*

சிறப்பு விருந்தினர்கள் : **திரு. க.தனபாலசிங்கம்**
*(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)*

**திரு. க.கவியன்பன்**
*(கல்விக்கழக கோட்டப் பொறுப்பாளர்)*

கௌரவ விருந்தினர் : **திரு. க.அன்பு**
*(அரசியல்துறை - சண்டிலிப்பாய்)*

பரிசில் வழங்கல் : **பிரதம விருந்தினர்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள்.*

(15794)



மூலிகைகளின் அரசன்

# ரிஷி காளான்

DXN DXN

## பல பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு

- மலேசியாவில் DXN நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டது.
- 22 நாடுகளில் விற்பனை செய்யப்படும் ரிஷி காளான் தயாரிப்புகள் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது வரப்பிரசாதமாகும்.
- இலங்கையில் விற்பனை செய்யப்பட்ட ஒரு வருட காலத்தில் தீராத ஆட்கொல்லி நோய்கள் பலவற்றை முற்றாகக் குணமடையச் செய்து பலரை மரணத்தின் பிடியில் இருந்து காப்பாற்றியுள்ளது.
- சலரோகம், ஆஸ்துமா, புற்றுநோய், அல்சர், உயர் இரத்த அழுத்தம், தாழ் இரத்த அழுத்தம், மாரடைப்பு, நரம்பு மண்டல நோய்கள், ஈரல் நோய்கள், சிறுநீரக நோய்கள், சளி, இருமல், கண் நோய்கள், தோல் நோய்கள், பிள்ளைப் பேறு, ஞாபக சக்தி குறைபாடு, கர்ப்பப்பைக் கோளாறுகள் போன்ற சகல நோய்களில் இருந்தும் குணமடைய ரிஷி காளான் மாத்திரைகளைப் பயன்படுத்தலாம்.
- பக்கவிளைவுகள் இல்லாதது.
- சர்வதேச தரக்கட்டுப்பாட்டு சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.
- ரிஷி காளான் தயாரிப்புகளின் பாவனை, பயன்பாடு மற்றும் நன்மைகள் தொடர்பாக மக்களிற்கு விளக்கமளிப்பதற்கு இந்திய மருத்துவ நிபுணர்கள், ஆங்கில வைத்திய நிபுணர்கள், தமிழ்நாடு அப்பலோ மருத்துவமனையின் நிபுணத்துவ ஆலோசகர்கள் உட்பட பலர் கருத்துரை வழங்கி உள்ளனர்.

யாழ்.மாவட்ட மக்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம். அன்புடன் அழைக்கின்றோம்.

### பிராந்திய ரீதியிலான கலந்துரையாடல்கள்

| திகதி | நேரம் | இடம் |
|---|---|---|
| 21.03.2003 வெள்ளி | முற்பகல் 9.00மணி | திரு.மு.தியாகராசா இல்லம், ஏழாலை மேற்கு, ஏழாலை. |
| | பிற்பகல் 4.00மணி | சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, |
| 22.03.2003 சனி | முற்பகல் 10.00மணி | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், கொடிகாமம். |
| | பிற்பகல் 3.30மணி | சுன்னாகம் வர்த்தக சங்க மண்டபம், சுன்னாகம் சந்தி, சுன்னாகம். |
| | இரவு 8.00மணி | இணுவில் பொது நூலகம், பரராசசேகரப் பிள்ளையார் கோயிலடி, இணுவில். |
| 23.03.2003 ஞாயிறு | முற்பகல் 10.00மணி | ஸ்ரீபரமானந்த ஆச்சிரமம், மாலு சந்தி (ஸ்ரீலங்கா ரெலிகொம் முன்பாக), நெல்லியடி. |
| | பிற்பகல் 4.00மணி | யா/அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி. |
| 24.03.2003 திங்கள் | பிற்பகல் 2.30மணி | யா/மல்லாகம் மகா வித்தியாலயம், K.K.S. றோட், மல்லாகம். |
| | பிற்பகல் 4.30மணி | மக்கள் நலன்காக்கும் பிரிவு, தலைமைக் காரியாலயம், இருபாலைச் சந்தி. |
| 25.03.2003 செவ்வாய் | பிற்பகல் 4.00மணி | யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், சுதுமலை. |

- தமிழ்நாடு (இந்தியா) அப்பலோ வைத்தியசாலையின் பிரதம மருத்துவ ஆலோசகரும் விஜயா பவுண்டேசன் நிர்வாக முகாமையாளருமான பேராசிரியர் வைத்திய நிபுணர் நிரஞ்சன் (இருதய சத்திரசிகிச்சை நிபுணர்) 26.03.2003 பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் விசேட கருத்துரைகள் வழங்குவார்கள்.

**Magnum Investments (pvt) Limited**

15, Stamboul Place, Colombo - 03

Tel.: 575753, 074-723396 Fax: 074-723396 E-mail:info@ magnumsl.com

யாழ்ப்பாணம் 0777 730708

(சி-37031)


## வெங்காயம் கொள்வனவு

சண்டிலிப்பாய்,மார்ச்21

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள் உற்பத்தி செய்த வெங்காயத்தை கொள்வனவு செய்து வருகின்றது.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் வெங்காயத்தின் ஒரு பகுதி சங்கக் களஞ்சியத்தில் சேமித்து வைத்து பின்னர் விதை வெங்காயம் தேவைப்படும் நேரத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என்று சங்கப் பொது முகாமையாளர் சுவைரவநாதன் தெரிவித்தார்.

இதேவேளை - இச்சங்கம் விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லையும் கொள்வனவு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஒ-135)

## காசநோய் குறித்த கருத்தரங்கு

சண்டிலிப்பாய்,மார்ச்21

யாழ்.மாவட்டத்தில் காசநோயைக் கட்டுப்படுத்துவது குறித்த கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிமுதல் பிற்பகல் ஐந்து மணிவரை யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய காசநோய் தடுப்பு இயக்கத்தின் செயற்பாடுகளை யாழ். மாவட்டத்திலும் விஸ்தரிப்பது உட்பட மற்றும் பல முக்கிய விடயங்கள் இக்கருத்தரங்கில் ஆராயப்படவுள்ளன. (ஒ-135)

## யோகாசன பயிற்சி வகுப்பு

வலி.மேற்கு,மார்ச்21

சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் 29ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் பிற்பகல் 2.30மணி தொடக்கம் மாலை 5மணிவரை இலவச யோகாசனப் பயிற்சி நடைபெறவுள்ளது. தொடர்ந்து ஆறு தினங்களுக்கு நடைபெறவுள்ள இப் பயிற்சியினை இந்தியாவில் இருந்து வந்த மூவர் கொண்ட குழுவினர் நடத்தவுள்ளனர். இப் பயிற்சியில் வலிகாமம் மேற்குப் பிரதேச மக்களை கலந்துகொள்ளுமாறு உதவிப் பிரதேச செயலர் மு.சிவராசா வேண்டுகோள்விடுத்துள்ளார். (ஒ-175)

## கிரிக்கெட் பயிற்றுநருக்கு!

அம்புளையில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவிருந்த கிரிக்கெட் தரம் 1 பயிற்றுநர்களுக்கான பயிற்சி வகுப்புகள் குறிப்பிட்ட தினத்தில் நடைபெறமாட்டாது என யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.(ஒ-5)

## கர்ப்பிணிகளுக்கான கிளினிக் பளையில்

தென்மராட்சி,மார்ச்21

பளைப் பிரதேச கர்ப்பிணிகளுக்கான கிளினிக் நாளை சனிக்கிழமை பளை அரச வைத்தியசாலையில் நடைபெறுமென சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

அன்றையதினம் ஆறு மாதத்துக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு நூலம்பு வலை வழங்கப்படுமென பளை பொது சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (ஒ-117)


NEW SCIENCE COLLEGE JAFFNA

**ORGANIC**

**திரு.மகேஸ்வரன்**

SAT, SUN - 6.00 a.m.

(15791)



### தவறிவிட்டது

இராமையா தர்சன் என்பவருடைய கையடக்கத் தொலைபேசி (நோக்கியா) ஒன்று நேற்றுமுன்தினம் வல்லைச் சந்திக்கும் முனியப்பர் ஆலயத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

இராமையா தர்சன் (தவில்)
ஆவரங்கால்,
10ஆம் கட்டை, புத்தூர்.
T.P: 0777. 165509

(15787)

# இறக்கைகட்டி பறக்கிறது பொருள்களின் விலை-எதிர்க்கட்சித் தலைவர்

# அரிசி, மா விலைகள் கிடுகிடுவென குறைகின்றன-வர்த்தக அமைச்சர்

விவசாயம், மீன்பிடி, கட்டுமானப் பணிகளில் முதலீடு செய்பவர்களுக்கு மூன்று வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரை வரிச்சலுகை வழங்கப்படுமென நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நாடாளுமன்றம், குழுக்களின் பிரதித் தலைவர் ஸ்ரீ அந்திரா ஹெறன்னதி தலைமையில் கூடியது.

வாய்மூல விடைக்கான கேள்விகளின் பின்னர் வருமானவரித் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் ஆரம்பமானது. அப்போது உணவு உற்பத்தி மற்றும் பாரிய அளவிலான நிர்மாணப் பணிகளில் முதலடு செய்பவர்களுக்கும் குறிப்பிட்ட காலத்திற்கு வரிச்சலுகை வழங்கப்படும் என்றும் நிதி அமைச்சர் அறிவித்தார்.

சபையில் தமிழ், முஸ்லிம் எம்.பிக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகக் காணப்பட்டது.

மேற்படி சட்ட மூல விவாதத்தில் எந்தவொரு சிறுபான்மை எம்.பிக்களும் உரைநிகழ்த்தவில்லை.

இச்சட்ட மூலம் மீதான விவாதம் ஆரம்பமாவதற்கு முன்னர், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவது குறித்து சபையில் விசேட கவனயீர்ப்பு உரை ஒன்றை நிகழ்த்தினார்.

அரச, கூட்டுத்தாபன, தனியார் துறை ஊழியர்கள் தமது சம்பளத்தில் தமக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை கொள்வனவு செய்ய முடியாமல் தடுமாறுகின்றனர். ஆகவே, அவர்களின் சம்பள உயர்வுக்கு அரசு வழிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

எதிர்க்கட்சி, ஆளும் கட்சி இரண்டினதும் 216 எம்.பிக்களுக்கு வரிச் சலுகையுடன் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதி எம்.பிக்களுக்கும், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தலைவர்கள், உயர் அரச அதிகாரிகள் ஆகியோருக்கும் வரிச் சலுகையுடன் வாகனங்கள் வழங்க ஆவன செய்யவேண்டுமென்று பொ.ஐ.முன்னணி உறுப்பினர் றெஜி ரணதுங்க - கேள்வி நேரத்தில் - வேண்டுகோள் விடுத்தார்.

ஜனாதிபதியின் பணிப்பின் கீழ் சில எம்.பிக்களுக்கும் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், உயர் அரச அதிகாரிகள் ஆகியோருக்கும் வரிச் சலுகையுடன் வாகனங்கள் வழங்கும் முறை ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. இது குறித்தும் மீண்டும் பரிசீலனை செய்வோம் என கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்த்தன பதிலளிப்பு விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இதையடுத்து, தொழிலமைச்சரும் ஆளும் கட்சி பிரதம கொறடாவுமான மஹிந்த சமரசிங்க, வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் சார்பில் பொருள்களும் சேவைகளும் ஒழுங்குபடுத்தலும் பேணுதலும் சட்ட மூலத்தை இரண்டாவது வாசிப்புக்கென சபையில் சமர்ப்பித்தார்.

சம்பந்தப்பட்ட அமைச்சரே சட்ட மூலத்தை சபையில் சமர்ப்பிக்க வேண்டுமென பொ.ஐ.முன்னணி உறுப்பினர் சரத் அமுனுகம அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

நிலையியற் கட்டளைகளின் 44 ஆவது சரத்தின் கீழ், அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவரோ அல்லது சம்பந்தப்பட்ட பிரதி அமைச்சரோ சட்ட மூலத்தை சபையில் சமர்ப்பிக்கலாம் என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார். அத்துடன் அவ்விவகாரம் முற்றுப்பெற்றது.

இதன் பின்னர் வருமான வரி திருத்தச் சட்டமூலத்தை சமர்ப்பித்து நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி உரையாற்றினார்.

வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட வரி மன்னிப்புக்கான விடயங்களுக்கு சட்ட அந்தஸ்து கொடுப்பதற்காகவே இந்தத் திருத்த சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது என்றார் நிதி அமைச்சர்.

அதனைக் கேட்டுக் கொதித்தெழுந்தவராக எழுந்து எதிர்க்கட்சியின் சார்பில் விவாதத்தினை ஆரம்பித்து உரையாற்றினார் பொ.ஐ.மு. உறுப்பினர் பீலிக்ஸ் பெரேரா.

அரசுக்கு டிமிக்கிவிட்டு வரி செலுத்தாது இருக்கும் திருட்டு முதலாளிமாருக்கு நீங்கள் வரிச்சலுகை அளிக்கிறீர்கள். ஏழை மக்கள் மீது வரிப்பளுக்களை தொடர்ந்தும் சுமத்துகிறீர்கள். இதுவா உங்கள் பொருளாதாரம்? இதனை அமுல் நடத்த ஒரு நிதி அமைச்சர் தேவையா?

வடக்கு நோக்கிப் பயணம் செய்யும் நூற்றுக்கணக்கான வாகனங்களுக்கான வரியாக பிரபாகரன் பத்து லட்சம் ரூபாவரை நாளொன்றுக்கு அறவிடுகிறார். அவரது சுங்கப் பகுதியின் சாதனையை உங்களது அரசால முறியடிக்க முடியுமா? - என்று பொரிந்து தள்ளினார் பீலிக்ஸ்.

அதன் பின்னர் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன அரைமணி நேரம்வரை உரையாற்றினார். வரி மன்னிப்பால் பல லட்சம் ரூபா கறுப்புப் பணத்தை எம்மால் புழக்கத்திற்குக் கொண்டுவர முடிந்தது. இது நாட்டின் அபிவிருத்தியைப் பேணுமென அவர் தெரிவித்தார். அதையடுத்து பொ.ஐ.மு.உறுப்பினர் சரத் அமுனுகமவும், ஜே.வி.பி. உறுப்பினர் அநுர திஸாநாயக்காவும் ஒரே தோரணையில் பேசினர். அரசின் வரி மன்னிப்பால் பணக்கார முதலைகள் குஜாலாக இருக்கின்றனர். ஏழைகள் தொடர்ந்தும் அவர்களால் சுரண்டப்படுகின்றனர் - என்றார்கள் அவர்கள்.




வருமான வரி திருத்தச் சட்ட மூல விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்க - வாழ்க்கைச் செலவு குறைகிறது என்று அடித்துக் கூறினார். அரிசி விலை கிடுகிடுவென குறைந்து வருகின்றது. மூன்றாவது காஸ் கம்பனி விநியோக வேலையை ஆரம்பித்ததால் காஸ் விலை குறைந்துள்ளது. பால்மா விலை குறைந்துள்ளது என்று புள்ளி விவரங்களை அமைச்சர் வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் கே.என்.சொக்ஸி விவாதத்துக்குப் பதிலளித்தார். வருமான வரி திருத்தச் சட்டமூலம் சகல நிலைகளிலும் நிறைவேறியது

இத்தாலியில் தொழில் புரியும் இலங்கையர்களின் நலன் குறித்து சபை ஒத்திவைப்புவேளை விவாதம் நடைபெற்றது. (ம)

# அரச கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குக!

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்றாற்போல அரச கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. அரசு இது விடயத்தில் உடனடியாகக் கவனமெடுத்து சம்பள உயர்வு வழங்க வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்து பேசும்போது கூறினார். அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவியேற்று 15 மாதங்களில் பொருள்களின் விலை பதினொரு சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 27 ரூபாவாக விற்ற அரிசி தற்போது 34 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. 470 ரூபாவாக விற்பனையான எல்.பி.காஸ் விலை 680 ரூபாவாக அதிகரித்துள்ளது.

பொதுவாக அரச, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் சக்தியை இழந்துள்ளனர். ஆனால் ஐ.தே.முன்னணி பதவிக்காலத்தில் இவர்களது சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்ற ரீதியில் அரச, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றோம் - என்றார். (ம)

# அரிசி ஊழலை நிரூபித்தால் அரசியலிலிருந்து விலகுவேன்!

## அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன சவால்

எனது அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளில் ஊழல்கள் ஏதாவது இடம்பெற்றுள்ளதென எவராவது நிரூபித்தால் அரசியலிலிருந்து நான் ஒதுங்கிவிடுகிறேன்.

நாடாளுமன்ற வருமான வரி திருத்தச் சட்டமூல விவாதத்தில் பேசிய புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் நிவாரணப் பணிகளை தனிமனிதனாக நான் தீர்மானிப்பதில்லை. எனது திட்டங்களை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கிறேன். அங்கு அனுமதி கிடைத்த பின்னரே அதிகாரிகளினால் அவை நிறைவேற்றப்படுகின்றன.

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட அரிசி தரமற்றதெனவும், எடை குறைவானதென்றும் கூறப்பட்ட புகார்களில் எதுவித உண்மையும் இல்லை.

வடபகுதிக்கு அனுப்பப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அனைத்தும், அரச அதிபரின் பரிந்துரைகளைக் கவனத்திற்கொண்டு - தேவைக்கேற்ப - அனுப்பிவைக்கப்படுகின்றன. அவை தரமானவை என அரச அதிபரினால் சான்றுரைக்கப்பட்ட பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உண்மை நிலை இதுதான் என்றார் அமைச்சர். (ம)

# இத்தாலியில் மேற்கொள்ளப்படவுள்ள இலங்கை அரசின் நடவடிக்கைகள்

இத்தாலியின் முக்கிய நகரங்களான ஜெனோவோ, மிலானோ ஆகியவற்றில் இலங்கைக் கவுன்சிலர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒத்திவைப்புவேளைப் பிரேரணைக்கு பதிலளித்துப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

இத்தாலியிலுள்ள இலங்கையருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு இலங்கைப் பிறப்புச் சான்றிதழை வழங்கும் வகையில் இத்தாலியின் தூதரகங்களுக்கு இத்தாலியிலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து அதிகாரிகள் அனுப்பிவைக்கப்படுவர்.

இத்தாலியிலுள்ள ஏனைய நகரங்களில் இலங்கை கவுன்சில்களை நியமிப்பது சம்பந்தமாக இத்தாலி அரசுடன் பேச்சு நடத்த வேண்டும். இது உடனடியாக நடக்கக்கூடிய விடயமல்ல என்றும் அவர் சொன்னார்.

சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போது தொழில் அமைச்சர் மஹிந்த அமரசிங்க தெரிவித்ததாவது:-

இலங்கையர் ஆயிரம் பேரை இவ்வருடம் இத்தாலிக்கு அனுப்பி தொழில் வாய்ப்பு பெற்றுக்கொடுபதற்கான வாய்ப்புகள் கிட்டியுள்ளன.

அங்கு ஏற்கனவே வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்துக்கு இணையான சம்பளத்தை இவர்களும் பெறுவர்.

இத்தாலி நாட்டின் தொழில் அமைச்சு வலுவான சட்ட அமைப்புகளைக் கொண்டு செயற்படுவதால் அங்கு தொழில் பிணக்குகள் உருவாவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை.

இத்தாலிய தொழில் அமைச்சருடன் தொடர்புகளை ஏற்படுத்தி நிலைமைகளை அவதானித்து செயற்படுகின்றோம்.

எமது தொழிலாளர்களின் பயிற்சிக்கேற்ற தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

வெப் தளம் மூலமாகவும் இதற்கான விவரங்கள் பெறப்படும்.

- இவ்வாறு அமைச்சர் கூறினார்.(ம)

# களுத்துறைக்கைதிகள் மூன்றுபேருக்கு எதிரான வழக்கு விசாரணை 2ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,மார்ச்21

இரத்மலானை விமான நிலையத்தைத் தாக்கியழிப்பதற்கு சதிசெய்தார்கள். அதற்காக ஆயுதங்களையும் வெடிபொருள்களையும் வைத்திருந்தார்கள் என்று ஐவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் வழக்கில் சான்றுப் பொருள்களான ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் என்பன வெலிக்கடை- விசேட மேல் நீதிமன்றத்துககு கொண்டுவரப்படாத காரணத்தினால் வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது முதலாம், இரண்டாம், மூன்றாம் எதிரிகளான சோமசுந்தரம் சிவநேஸ்வரன், செல்வநாயகம் அகிலன், இராமலிங்கம் மகேசன் ஆகியோர் களுத்துறைச் சிறைச்சாலையிலிருந்து கொண்டு வரப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கில் சாட்சிகளாகவுள்ள பொலீஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களும் மன்றில் சமுகமாகியிருந்தனர்.

சட்டமா அதிபர் தரப்பில் ஆஜரான சட்டவாதி என். நவாவி- எதிரிகள் வைத்திருந்த ரி-56ரக துப்பாக்கிகள், கைக்குண்டுகள், துப்பாக்கிச் சன்னங்கள் மற்றும் தற்கொலை அங்கிகள், கிரனேற் லோஞ்சர் உட்பட பெருந்தொகையான பொருள்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்திலிருந்து இதுவரை சிறப்பு நீதி மன்றத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனால், வழக்கு விசாரணையை ஆரம்பிக்க முடியாமலுள்ளது - என்றார். இதனை அடுத்து வழக்கு எதிர்வரும் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம)



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்திற்கு சென்ற யாழ்.மாவட்ட சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் குழுவினர் இந்திய யாத்திரிகர் ஒருவருக்கு சிகிச்சை அளிப்பதைப் படத்தில் காணலாம். (ஒ-5)

## கோப்பாய் தரவைப் பகுதியில்.

# உவர்நில விவசாய நடவடிக்கைக்கு நிதி உதவி வழங்குமாறு கோரிக்கை

## அரச அதிபருக்கு சம்மேளனம் கடிதம்

கோப்பாய்,மார்ச்21

கோப்பாய் தரவைப் பகுதியில் உவர்நில நெற்செய்கையினை காலபோகத்தில் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு நிதி உதவி செய்யுமாறு யாழ். அரச அதிபரை கோப்பாய வடக்கு மத்தி விவசாய சம்மேளனத்தினர் மகஜர் மூலம் கோரி உள்ளனர். மேலும் இப்பகுதியில் யுத்த காலத்தின் போது புதைக்கப்பட்ட மிதிவெடி, கண்ணிவெடிகளையும் அகற்றி உதவுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

சுமார் 800 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள இத்தரவை உவர் நிலப் பகுதியில் 93 - 94ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவில் - திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிறுவன மேற்பார்வையோடு - பரீட்சார்த்த விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அந்த விவசாய முயற்சி வெற்றியளித்தது.

அக்காலகட்டத்தில் அம்பாந்தோட்டையில் இருந்து உவரை எதிர்த்து வளரக்கூடிய நெல் இனங்களான பி.ஜி.500, எச்.4, ஏ.ரி.400, ஏ.ரி.401 ஆகிய இன விதைநெல் பெறப்பட்டு இப்பகுதியில் பயிரிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-72)

# ஆரம்ப ஆட்டக்காரராக...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டங்கள் எடுக்கக் கஷ்டமாக இருக்கிறது என்பதற்காக ஆரம்ப ஆட்டக்காரர் நிலையை விட்டு நான் கீழிறங்கவில்லை. மத்திய வரிசையில் ஓட்டம் எடுக்க ஷேவாக் சிரமப்படுகிறார் என்பதற்காகத்தான் நான் கீழிறங்கிக் கொண்டு அவரை ஆரம்ப ஆட்டக் காரராக அனுப்பினேன். அணியின நலனுக்காகத்தான் இங்கு எந்த முடிவும் எடுக்கப்படுமே தவிர, தனி நபரின நலனுக்காக இல்லை.

ஆரம்ப ஆட்டக்காரராக இறங்க வேண்டும் என்பதுதான் எப்போதுமே எனது விருப்பம். எனக்கு அந்த இடம் தான் ஸ்கோர் செய்ய அதிக வசதியான இடம். அந்த இடத்தில் அணிக்கு சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்திருக்கிறேன். நிச்சயமாக மீண்டும் ஆரம்ப ஆட்டக்காரராக வருவேன்.

இப்போது ஆரம்ப ஆட்டக்காரர்களாக உள்ள சச்சின், ஷேவாக் ஆட்டத்தைக் கவனித் துக்கொண்டுதான் இருக்கிறோம். அணி எப்படி விளையாடுகிறது என்பதையும் கவனித்துக் கொண்டிருக்கின்றோம். இவர்களின ஆட்டம் திருப்திகரமாக இல்லாத பட்சத்தில் அல்லது அணிக்குத் தேவைப்படும் பட்சத்தில் அணியின் நலனுக்காக மீண்டும் நான் களமிறங்குவேன்.

- இவ்வாறு சௌரவ் கங்குலி அதிரடியாகப் பேட்டி கொடுத்திருக்கிறார். நான்கு ஆட்டத்தில் நன்றாக விளையாடியதும் மீண்டும் தனது ஆரம்ப ஆட்டக்காரர் இடத்தைப் பிடிக்கத் திட்டம் போட்டுவிட்டார் கங்குலி. இம்முறை கீழிறங்கப் போவது சச்சினா....? ஷேவாக்கா...? அடுத்த சில நாள்களில் தெரியும்.

"அணியில் உள்ள வீரர்கள் யாரும் இதுவரை உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தில் விளையாடியதில்லை. ஆகவே, எதிர்பார்ப்பதற்கும மேலாக நன்றாக விளையாடவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

"இங்கு இரண்டு நாள்களாக மழை பெய்துகொண்டிருக்கிறது. ஆகவே, டக்வேர்த் - லூயிஸ் விதியை மனதில வைத்து விளையாடுவோம். கென்யாவைக் குறைத்து மதிப்பிடவில்லை. சில பெரிய அணிகளுக்கு அவர்கள் அதிர்ச்சி வைத்தியம் அளித்திருக்கிறார்கள். மற்ற அணிகளைப் போலத்தான் அவர்களை நாங்கள் நினைக்கிறோம். கவனமாக விளையாடுவோம.

"நான் தலைவர் பதவியை விட்டு விலக முடிவெடுத்திருப்பதாகச் செய்திகள் வெளியாகின்றன. நான் அப்படிக் கூறவே இல்லை. நான் நன்றாக விளையாடும்போது எதற்காக தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும்?" - என்கிறார் கங்குலி. (ம)

## திறப்பு விழா

புங்குடுதீவு பன்னிரெண்டாம் வட்டாரம் தில்லைப்பற்று கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சனசமூக நிலைய கட்டட திறப்பு விழாவும் பாலர் பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வும் நாளைமுற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக தீவுப்பகுதி தெற்கின் முன்னாள் உதவி அரச அதிபர் வி.இரத்தினமும் சிறப்பு விருந்தினராக தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்தவமும் கலந்து கொள்வர்.

## பெண்களுடன்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை மேற்கொள்ள சபைக்கு உரிமை உள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே உலகக்கிண்ணத் தொடரின் மோசமான ஆட்டத்திற்காக பாகிஸ்தான் வீரர்களிடம் விசாரணை நடந்து வருகிறது. ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவே இச் சம்பவத்தையும் விசாரிக்குமா? என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. (ம)

## இந்திய...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவருகிறது.

இறுதி ஆட்டத்தில் ஆஸியை சந்திக்கும் வாய்ப்பு இந்திய அணிக்கு இருப்பதால் 3 துறைகளிலுமே கவனம் செலுத்த முடிவுசெய்துள்ளனர்

ஆரம்ப வீரர்கள் 20 ஓவர்களுக்காவது ஆட்டமிழக்காமல் நின்று ஆடவேண்டும். ஓட்ட வேகத்தை உயர்த்த வேண்டுமென்றும் இதுவரை அணியினர் செய்த தவறுகள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு அந்த தவறுகள் மீண்டும் நடக்கமால் இருக்க உறுதி பூண்டுள்ளனர்.

இந்திய அணியின் உளவியல் நிபுணர் சாண்டி கார்டர், ஆஸியைச் சந்திக்க தேவையான மனப்பயிற்சியையும் அளித்துவருகிறார். மனதில் தேவையில்லாமல் உருவாகும் பயத்தை அகற்றவும் பயிற்சி தருகிறார்.

குறிப்பாக ஆஸி.பந்து வீச்சாளர்கள் கடைப்பிடிக்கும் உடம்பைத் தாக்குவது போல் வரும் பந்துகளை எதிர்கொள்ளும் ஆலோசனைகளையும் அவர் வழங்கியுள்ளார். இதனால், இந்திய அணியினர் எவ்வளவு பெரிய சவாலையும் சமாளிக்கத் தயாராக உள்ளனர். (ம)

# 'சிரான்' பணிகள் குறித்து 5 நாள்கள் ஆய்வுப் பட்டறை

## கிளிநொச்சியில் நடைபெறுகின்றது

'சிரான்' செயலகத்தின் அவசர மனிதாபிமானப் பணிகளுக்கான துறைரீதியான ஐந்துநாள் ஆய்வுப்பட்டறை, கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

இதில் கலந்துகொள்வதற்காக யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் செபத்மநாதன் நேற்றுமுன்தினம் அங்கு சென்றுள்ளார்.

இரண்டாம் நாள் ஆய்வுப் பட்டறையில் கல்வி, வீதி, வீடமைப்பு, நீர் வழங்கல், நீர்ப்பாசனம், சக்தி மற்றும் தொலைத்தொடர்பு தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன.

இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ள மூன்றாம் நாள் ஆய்வுப் பட்டறையில் தொழிற்பயிற்சி மற்றும் நுண்கருத்திட்ட நிதி தொடர்பான விடயங்களும் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ள நான்காம் நாள் ஆய்வுப்பட்டறையில் நிறுவனங்களின் ஆற்றல், மேம்பாடு மற்றும் விவசாயம் தொடர்பான விடயங்களும் ஆராயப் படவுள்ளன.

எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ள இறுதி நாள் ஆய்வுப்பட்டறையில் கண்ணிவெடி தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

இந்தப் பட்டறையில் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்டத்தின் துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர். (ம-5)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள்

1. வணிகமாணி பகுதி - I - 2001

பிற்போடப்பட்ட மேற்படி பரீட்சை 31.03.2003 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகின்றது. நேர அட்டவணையையும் பரீட்சை அனுமதி அட்டையையும் 25.03.2003 முதல் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 - 2223612 (யாழ்ப்பாணம்) என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

20.03.2003 (சி-37040) - பதிவாளர்.



நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில்

மண்டலாபிஷேக பூர்த்தி

*விநாயகர் அடியார்களே!*

கைலாச விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கடந்த 06.02.2003 வியாழக்கிழமை நடந்த கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேகத்தின் 45 ஆம் நாள் பூர்த்தி தினமான நாளை (22.03. 2003) சனிக்கிழமை விநாயகப் பெருமானுக்கு சகஸ்ர சங்காபிஷேகமும் (1008) கைலாசநாத பெருமானுக்கும், கைலைநாயகிக்கும் அஷ்டோத்திர கலச சகஸ்ர சகித சங்காபிஷேகமும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும் நிகழத் திருவருள் கைகூடியுள்ளது. இன்று (21.03.2003) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு கிரியைகள ஆரம்பமாக கடஸ்தாபனம், யாக பூஜைகள், விஷேச ஹோமங்கள் நடைபெறும். 22.03.2003 சனிக்கிழமை காலை 7 மணிமுதல் யாக பூஜைகள், விஷேச ஹோமங்கள் நடைபெற்று, 10 மணிக்கு மகாசங்காபிஷேகம் நடைபெறும். 11.30 மணிக்கு விஷேச தீபாராதனை நடைபெறும். தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் விநாயகப் பெருமானைத் தரிசித்து விநாயகப் பெருமான் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு தண்டிகை உற்சவம் நடைபெறும்.

*கைலாச விநாயகப் பெருமான் சேவையில*

(C/37042) கு.மணிக்குருக்கள்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 04 - 10 - 1920



மறைவு 19 - 02 - 2003

### அமரர் இரத்தினம் மாணிக்கம்

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பலவித உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (21.03.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்காலிக முகவரி:*
கைதடி தென்கிழக்கு,
கைதடி.

(15797)

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


தேவை!

HSCMF-நிறுவனத்திற்கு O/L படித்த பயிற்சி பெண் எழுதுநர் தேவை. எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை நேரில வரவும்.

நவாலி - மானிப்பாயில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை (காலை 9 முதல் 1 மணி.)

தொடர்பு:
HSCMF, புலவர் வீதி,
நவாலி வடக்கு,மானிப்பாய். (15806)

CHEMISTRY - CENTRE
பலாலி வீதி, கந்தர்மடம்.
A/L - 2004
ORGANIC
Mon., Fri. : 5-6 p.m.
CHEMISTRY PAPER
Mon., Fri. : 6-7 p.m. (37043)
By : அன்பழகன்.

லஷ்சுமி இணுவில்
விக்ரம், லைலா, வையாபுரி, நாசர் நடித்த
தில் (ரீலைஸ்)
தினசரி : 11.00, 3.00, 7.00

நிர்மலா சினிமாஸ்
அர்ஜுன், பூஜா நடித்த
சூரிய பார்வை
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45மணிக்கு
RUSH HOUR - 2

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார், மீனா, மந்த்ரா, வடிவேல், கோவைசரளா
மாயி (ரீலிஸ்)
10.30, 2.30, 6.30

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த
சொக்கத்தங்கம் (ரீலிஸ்)
காட்சிகள் தினசரி : 11.00, 3.00,7.00 (பு.நேரம்)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மயில்வாகனம் நாகம்மா

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் நாகம்மா நேற்று (20.03.2003) வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், மல்லாகம் கிழக்குவளவைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை மயில்வாகனம் (மலாயன் ஓய்வூதியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - தங்கம்மா தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான இராசையா, துரையப்பா, கண்மணி, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி செல்வராசா பரமேஸ்வரி, Dr.மகேசன் (J.P.), மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ம.செல்வராஜா (சித்தியார் - முன்னாள் உயர் நீதிமன்ற முதலியார், முன்னாள் தலைவர் - வலி.தெற்கு பிரதேச சபை), திருமதி மகேசன் நாகேஸ்வரி (இளைப்பாறிய பிரதம மருந்தாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), திருமதி மகேந்திரன் கலாரஞ்சிதம் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் யுவீந்திரா (ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்-கனடா), திருமதி நிமலன் தயாளினி (நியூஸிலாந்து), Dr. தீனதயாளன் (கொழும்பு), தயாகரன் (இறுதி வருடம், விவசாய பீடம், யாழ்.பல்கலைக் கழகம்), ஆதவன் (உயர்தரம், யாழ்.இந்துக் கல்லூரி), துளசி (சாதாரண தரம், வேம்படி மகளிர் கல்லூரி), நிமலன் (நியூஸிலாந்து), ரமணி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கரிபிரணவனின் (கனடா) அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.03.2003) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:

*17, அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

(15807)

Dr.மகேந்திரன (மகன் - J.P.)
மா.செல்வராஜா (சித்தியார்-J.P.)
(மருமகன்)

## செல்லப்பா பரமானந்தம்

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பரமானந்தம் அவர்கள் நேற்று (20.03.2003) வியாழககிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - சங்குப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும் தேசோவதி (வாணி) யின் அன்புக் கணவரும் கரிகரன (ஜேர்மனி), பங்கயவதனி (ஜேர்மனி), இரவிகுமாரி (கொலண்ட்), பிரபாகரன் (ஸ்கந்தபுரம்), வசந்தகுமாரி(சுவிஸ்), கிருபாகரன் (ஜேர்மனி), சிறிகரன் (லண்டன்), மதிவதனி (ஜேர்மனி), ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற யோகேஸ்வரி(ஜேர்மனி), ஜெயக்குமார் (ஜேர்மனி), தர்மகுணநாயகம் (கொலண்ட்), புஸ்பராணி (ஸ்கந்தபுரம்), பரமலிங்கம் (சுவிஸ்), தேவநந்தினி (ஜேர்மனி), கரசி (லண்டன்), கருணாகரன் (கண்ணன்) ஆகியோரின் அன்பு மாமனும் தட்சா, தாரணி, தக்சனா, தனா, ஜெயவதனி, திவாகர், கலிஸ்டன், மாதினி, கரிப்பிரதா, ஆரபி, மாதுளன், (பரியோவான் கல்லூரி), கீர்த்திகா, (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), பதுசனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (22.03.2003) சனிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் துண்டி மயானத்தில் பி.ப.3 மணிக்குத் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

*54/12,பாண்டியன்தாழ்வு,*
*யாழ்ப்பாணம்.*

(15808)

ப.தேசோவதி (மனைவி)
கண்ணன (மருமகன்)

## இராசா கனகலிங்கம்

*(ஓய்வுபெற்ற களஞ்சியப்பொறுப்பாளர், புடைவை நெசவு கூட்டுறவுச் சங்கம், கோண்டாவில்)*

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா கனகலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம (19.03.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சரோஜாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் இராசா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் தவமலர், பரமலிங்கம், குமாரலிங்கம், காலஞ்சென்ற மருதலிங்கம் மற்றும் சரஸ்வதி, இரத்தினசிங்கம் (தலைமை இலிகிதர் - நீர்ப்பாசனத் திணைக்களம், முருங்கன்), பரமேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசையா, இராஜேஸ்வரி, குணநாயகி, மணி, காலஞ்சென்ற சின்னையா மற்றும் ஆனந்தகௌரி, மகேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் செல்வரட்ணம், காலஞ்சென்ற பேரின்பநாதன், மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனரும் இரவீந்திரன் (ஜேர்மனி), அகிலேந்திரன் (சுவிஸ்), சந்திராதேவி, பாலேந்திரன் (கனடா), தனேந்திரன் (லிங்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காஞ்சனாதேவி (ஜேர்மனி), திருவிளங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபினியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.03.2003 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

(15805)

செ.திருவிளங்கம்(மருமகன்),
க.தனேந்திரன் (லிங்கா - மகன்).

# பதினொரு வேங்கைகளின் ஊர்திப் பவனிகள் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்21

திருகோணமலைக்கு அப்பால் சர்வதேசக் கடற்பரப்பில் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் மீதான தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பதினொரு வேங்கைகளின் திருவுருவப் படங்கள் தாங்கிய ஊர்திப் பவனியும் வீர வணக்கக் கூட்டங்களும் இன்று கோட்ட மட்டத்தில் இடம்பெறவுள்ளன.

தென்மராட்சிக் கோட்டத்தில் 11 வேங்கைகளின் திருவுருவப் படங்கள இன்று முற்பகல் 10மணிக்கு சாவகச்சேரி பஸ்நிலையத்தில் வைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்படும். அதன் பின்னர் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெறும்.

தீவகக் கோட்டத்தில் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் முற்பகல் 10மணிக்கு வீரவணக்கக் கூட்டம் இடம்பெறும் அதற்கு முன்பாக பழைய பஸ் டிப்போ சந்தியில் இருந்து 11 வேங்கைகளின் திருவுருவப் படங்கள் ஊர்வலமாக நினைவு மண்டபத்துக்கு எடுத்துவரப்படும்.

வடமராட்சிக் கோட்டத்தில் பிற்பகல் 4மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெறும். நெல்லியடிச் சந்தியில் இருந்து வேங்கைகளின் திருவுருவப்படங்கள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு மில்லர் பூங்காவில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும்.

வலிகாமம் கோட்டத்தில் 11 வேங்கைகளின் திருவுருவப்படங்கள் தாங்கிய ஊர்தி அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், மல்லாகம், சுன்னாகம், இணுவில், புன்னாலைக் கட்டுவன், மானிப்பாய், சங்கானை, சுழிபுரம், பணடத்தரிப்பு ஆகிய இடங்களுக்கு பவனி வரும். பிற்பகல் 3.30 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெறும்.

நல்லூர் கோட்டத்திலும் நண்பகல் 12மணிமுதல் ஊர்திப் பவனி இடம்பெறும். அரியாலையில் மாவீரர் அம்பிகைவாகனின் திருவுருவப் படம் அவரது இல்லத்தில் இருந்து பொறுப்பேற்கப்பட்டு அரியாலை சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டு அங்கு வீர வணக்கக் கூட்டம் இடம்பெறும்.

அதன் பின்னர் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பிரதான வீதிவழியாக கொக்குவிலை அடையும். கொக்குவிலில் மாவீரன் நவநீதனின் உருவப படம் பொறுப்பேற்கப்பட்டு பிற்பகல் 1.30மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் வீரவணக்கம் இடம்பெறும்.

மாவீரர்களின் திருவுருவப் படங்கள் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செலல்பட்டு, மாலை 4மணிக்கு நினைவுக்கற்கள் திரை நீக்கம் செய்யப்படும்.

(ஐ-3-70-182)

## 'அவுட்' கொடுக்காத...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ததால் வெளியேறினேன்" - என்கிறார் கில்கிறிஸ்ட்.

ஆஸ்திரேலியாவில் அண்மையில நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் நஸார் ஹூஸைனும், வோகனும் 'ஆட்டமிழந்தது' தெரிந்த பின்பும் நடுவர் ஆட்டமிழப்புக் கொடுக்க மறுத்ததால் களத்தை விட்டு அவர்கள் வெளியேறவில்லை.

இந்நிலையில், நான் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேன் என அப்போது நினைத்தேன் அந்த நினைப்புத் தான் இத்தகைய முடிவை எடுக்க என்னைத் தூண்டியது - என்றார்.

கில்கிறிஸ்ட்டின் இந்த நடத்தைக்கு சர்வதேச அளவில் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. ஆஸ்திரேலிய விளையாட்டு சபை கில்கிறிஸ்டுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளது.

சர்வதேச விளையாட்டில் வீரர்கள் இதுபோல் நேர்மையாக நடந்து கொள்வது அரிதாகிவிட்டது. இதுபோன்ற சூழ்நிலையில், கில்கிறிஸ்ட் நேர்மையாக நடந்து கொண்டதைக் கண்டிப்பாகப் பாராட்டியாக வேண்டும் என்று பலரும் கூறியுள்ளனர்.

ஆனால், ஆஸ்திரேலிய தலைவர் ரிக்கிபொன்ரிங் இந்த நடத்தைக்கு வருத்தம் தெரிவித்துள்ளது பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

இது குறித்து பொன்ரிங் கூறும்போது, நான் வீரர்கள் யாரிடமும் இதுபோல் நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. அவரவரின் விருப்பத்தின்படி நடந்து கொள்கிறார்கள். ஆனாலும், நடுவர் அவுட் கொடுக்காத நிலையில் வீரர்கள் வெளியேறுவதை நான் சரியானதாகக் கருதவில்லை - என்றார்.

(ம)

# மூன்றாம் நாள் அமர்வு பற்றி அமைச்சர் பீரிஸ்

ஹக்கோனி,மார்ச்21

ஜப்பான் பேச்சுக்களின் மூன்றாம் நாள் அமர்வில் நேற்று சமஷ்டி அமைபபிற்கான நிதி அதிகாரங்கள் தொடர்பாக ஒரு உடன்பாட்டிற்கு இருதரப்பினரும் வந்துள்ளோம். சமஷ்டி அமைப்பின் அனைத்து அலகுகளுக்கும் தேவையான நிதி அதிகாரங்களை வழங்கவேண்டும் என்று ஒப்புக்கொண்டுள்ளோம் என்றார் அரச குழுத் தலைவரான அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

மத்திய அரசின் நிதிக் கொள்கையை வகிப்பதில் சமஷ்டி அமைப்பின் அலகுகளுக்கு கருத்துக் கூறும் அதிகாரம் இருக்கவேண்டும் என்றும் கருதப்பட்டது.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு வழங்கிவருகிறது. அதன் வெளிப்பாடாக ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்பாக அமெரிக்க அரசின் பிரதிஅமைச்சர் ரிச்சட் ஆமிடேஜ் ஏப்ரல் 14 ஆம் திகதி ஆயத்த மாநாடு ஒன்றை நடத்தவுள்ளார்.

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டை வெற்றியடையச் செய்யவேண்டுமென்பதில் அமெரிக்கர்கள் திரைக்குப் பின்னால் கடுமையாக உழைத்து வருகிறார்கள்.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இணைந்து நடத்தவுள்ளன என்றார்.

(ஐ-3)

# குவைத்திலிருந்து சவூதிக்கு வரும் இலங்கையர்களுக்கு உரிய ஏற்பாடு

## சவூதிஅரேபியா இலக்காகாது என்ற நம்பிக்கை

ஈராக் போரில் சவூதி அரேபியா இம்முறை ஓர் இலக்காக அமையாது என்று நம்புவதாக சவூதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் ஐ.அனஸார் தெரிவித்திருக்கிறார்.

எவ்வாறாயினும் குவைத்திலிருந்து யுத்தம் காரணமாக இலங்கையர் வெளியேறி சவூதிக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு வருவோருக்கு உதவ எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் தூதுவர் தெரிவிக்கின்றார்.

சவூதி அரேபியாவின் குவைத் துடனான எல்லையிலுள்ள இரு நகரங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன எனவும் அங்கு வந்து சேருவோரை இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்திருக்கிறார். குவைத்திலிருந்து வரும் இலங்கையர்களுக்கு உதவ தொண்டர் படையொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது.

சவூதிஅரேபியாவில் சுமார் மூன்றரை லட்சம் இலங்கையர்கள் உள்ளனர்.

(ஐ)

# சீருடை முத்திரை பெறாதோருக்கு!

கோப்பாய்,மார்ச்.21

இந்த வருடத்துக்கான சீருடைத் துணிக்கு ஏற்கனவே விண்ணப்பித்து இதுவரை சீருடை துணி பெறுவதற்கான முத்திரை கிடைக்கப்பெறாத, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அடங்கும் நீர்வேலி, அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எல்லைகளுள் வசிக்கும் மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரை நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் பிரதேச செயலகத்துக்கு வருகை தந்து முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

முத்திரை பெற்றுக்கொள்வதற்கு தாமதமாக விண்ணப்பித்தவர்களை இந்தத் தினங்களில் வருகை தரவேண்டாம் என்றும் அவர் கேட்டுள்ளார்.(ஐ-72)

## பக்தாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துருப்புக்கள் நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றன.

அமெரிக்கப் போர் விமானங்கள் ஈராக் மீது தாக்குதல்களைத் தொடுத்த அதேவேளை, ஏவுகணைத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. அமெரிக்க ஜெட் விமானங்கள் இரைச்சலுடன் பறந்த போது ஈராக் விமான எதிர்ப்பு பிரங்கிகள் முழங்கின.

ஈராக் தலைநகரான பக்தாத்தின் தெற்கு, கிழக்கு புறநகர்ப்பகுதிகளிலேயே முதலாவது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன எனச் செய்திகள் தெரிவித்தன. அதையடுத்து நகர மத்தியிலும் பல குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றன.

தாக்குதலை எதிர்பார்த்து பக்தாத் நகர வீதிகள் வெறிச்சோடிய நிலையிலேயே இருந்தன. கடைகள், உணவு விடுதிகள்யாவும் மூடப்பட்டிருந்தன. ஒருசில கார்களே வீதிகளில் காணப்பட்டன. பேய் அறைந்த நகராகவே பக்தாத் காணப்பட்டது. அரசாங்க கட்டடங்களைச் சுற்றிவர மணல் மூடைகள் அடுக்கப்பட்டிருந்தன.

முதலாவது தாக்குதல் நடந்த ஒரு சில நிமிடங்களில் அபாய மணிகள் நகரில் ஒலித்தன. குண்டு வெடிப்புக்களை அடுத்து ஈராக் வானொலி செயலிழந்தது. அமெரிக்க இராணுவத்தினால் அந்த வானொலி கையேற்கப்பட்டதாகத் தோன்றியது.

ஈராக் வானொலியை அமெரிக்கா கையேற்றதை அடுத்து ஈராக் மக்களுக்கு அரபு மொழியில் ஒரு செய்தி ஒலிபரப்பப்பட்டது.

"இந்தத் தினத்துக்காகவே நாம் காத்திருந்தோம். சதாமின் இறுதி நாள்கள் நெருங்கிவிட்டன" - என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# இலங்கை சமாதானப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறவுள்ளது. முழு இலங்கைக்கும் என்றாலும் விசேடமாக இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு உதவுவது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. இக்கூட்டத்தின் நடைமுறைகள் குறித்து புதனன்று காலை நடைபெற்ற அமைதிப் பேச்சுக்களின் போது அரசு - புலிகள் ஆகிய இரு தரப்பினருக்கும் நான் விளக்கினேன்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு நான்கு இணைத் தலைவர்கள் தலைமை தாங்குவர். ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகிய நான்கு தரப்பினரும் தலைமைப்பொறுப்பை இணையாக வகிப்பர்.

வடக்கு - கிழக்குத் தேவைகள் பற்றிய மதிப்பீடுகளை ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, ஐநா.அபிவிருத்தித்திட்டம் ஆகிய மூன்று அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன. அவற்றின் அறிக்கையும் முழுநாடு மற்றும் தென்னிலங்கைத் தேவைகள் தொடர்பாக இலங்கை அரசும் சமர்ப்பிக்கும் அறிக்கையில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும். கடந்த 19 வருட போரினால் வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட அழிவுகளை சீர்செய்வது தொடர்பான மற்றொரு அறிக்கையையும் இலங்கை அரசு சமர்ப்பிக்கும். அதுவும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு அடிப்படையாக அமையும்.

பேச்சு நடத்தும் இரு தரப்பினரும் நோர்வேயும் இணங்கினால் உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தை அடுத்து உடனடியாகவே மேலும் ஒரு சுற்றுப பேச்சை ஜப் பானில் நடத்துவதற்கு ஜப்பான் தயாராகவுள்ளது. ஜூன் 9ஆம், 10ஆம் திகதிகளில் உதவும் நாடுகள் கூட்டம் முடிந்ததும் - ஒருநாள கழித்து - ஜூன் 12ஆம், 13ஆம் திகதிகளில் குறுகியகாலப் பேச்சுச் சுற்று ஒன்றை ஜப்பானில் நடத்தலாம் எனத் தெரிவித்துள்ளோம்.

### நிதி உதவிகள் வானத்திலிருந்து வராது

நத்தார் தாத்தா வானத்தில் இருந்து இறங்கிவந்து பரிசு மழை களை - அன்பளிப்புகளை - வெறுமனே அள்ளித்தருவது போன்ற விடயமல்ல உதவும் நாடுகளின் கூட்டமும் அவை வழங்கும் உதவிகளும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் நான் தெளிவுபடுத்தியுள்ளேன்.

பேச்சில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும். பேச்சில் திட்டவட்டமான முன்னேற்றம் இல்லாவிட்டால் உதவி வழங்கும் விடயத்தில் உதவும் நாடுகள் தாராளம் காட்டுவது கஷ்டமானதாக இருக்கும் அல்லது இயலாததாக இருக்கும். இலங்கையில் சமாதானத்தை முன்னெடுப்பதிலும் உறுதிப்படுத்துவதிலும் தான் சர்வதேச சமூகத்தின் நிதி மற்றும் பொருளாதார உதவிகள் வழங்குவது தங்கியுள்ளது.

வேறு வார்த்தைகளில் சொல்வதானால் சமாதான முன்நகர்வும் சர்வதேச சமூகத்தின் உதவியும் ஒன்றில் ஒன்று நேரடியாகத் தங்கியுள்ளன. ஒன்றில்லாமல் மற்றது நகர்வது சாத்தியமற்றது.

சமாதானப் பேச்சுக்கள் இப்போது மிகக் கஷ்டமான விடயத்துக்குள் நகர்ந்திருக்கின்றன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

வடக்கு - கிழக்குக்கான பொருளாதார மற்றும் மனிதாபிமான விடயங்கள் தொடர்பாக உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமை குறித்து புலிகள் தரப்பில் அதிருப்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு நிதியம் தொடர்பான ஒப்பந்தத்தை உலக வங்கி உறுதிப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் போன்ற - எல்லா வகையான நடைமுறை செயற்பாடுகளிலும் நேர்ந்துள்ள தவிர்க்கமுடியாத - தாமதங்களே இதற்குக் காரணம் என இலங்கை அரசுத் தரப்பு சமாதானம் கூறியுள்ளது.

எப்படியென்றாலும் அந்த நிதியத்துக்கு உறுதியளிக்கப்பட்ட நிதி வழங்கப்படுவதும் தேவை. ஒழுங்குகளின் அடிப்படையில் உரிய திட்டங்களுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்படுவதும் விரைவில் இடம்பெறும்.

உதவும் நாடுகள் தமது நிதியை - உதவிகளை - உரிய திட்டங்களுக்கு வழங்குவதற்கு தளர்வுப் போக்கான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதையே ஜப்பான் விரும்புகின்றது.

எது எப்படி என்றாலும் சிரான் உபகுழு வரிசைப்படுத்தியுள்ள முன்னுரிமை அடிப்படைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். என்பதே அவசியமானதாகும்.

புனரமைப்புத் தேவைகள் பற்றிய கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 6 ஆம் திகதி கொழும்பில் நடைபெறுவது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். அரசுத் தரப்புப் பிரதிநிதிகள், அரச கட்சியினர் மட்டுமல்லாமல் புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் கல்விமான்கள், பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள், விமர்சகர்கள் என பல தரப்பினரும் பங்குபற்றும் விசாலமான கருத்துப் பரிமாறல் நிகழ்வாக இது அமையவிருப்பது வரவேற்புக்குரிது.

### வாஷிங்டனில் கருத்தரங்கு

இதேபோன்று உதவும் நாடுகளின் - வாஷிங்டன் கருத்தரங்கு ஜூன கூட்டத்திற்கு தயாராகும் நடவடிக்கையாக ஏப்ரல் 14 ஆம் திகதி அமெரிக்காவின் வாஷிங்டனில் சிறிய அளவிலான கருத்தரங்கு ஒன்று நடைபெறவிருக்கின்றது. பிரதி ராஜாங்கச் செயலாளர் ஆர்மி டேர்ஜ் அநேகமாக இக்கருத்தரங்கிற்கு தலைமை வகிப்பார். ஈராக் யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை அமெரிக்கா செய்வது வரவேற்புக்குரியது.

உதவும் நாடுகளின் கூட்டம் வெறும் கொண்டாட்டமோ, ஓரிரு நாள் நடக்கும் கூத்தோ அல்ல. அந்தக் கூட்டம் குறித்து உதவும் நாடுகள் கவனமாகவும் தெளிவாகவும் உள்ளன.

அந்தக் கூட்டம் நடைபெறும் சமயத்தில் சமாதானப் பேச்சுக்களில் முன்நகர்வு - முன்னேற்றம் - உறுதியானதாகவும், தெளிவானதாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்; நம்புகின்றோம். சமாதானப் பேச்சுக்களின் போக்குக் குறித்து சில தரப்புக்களில் ஏற்பட்டிருக்கும் ஐயத்தை, கேள்வியை - அதிருப்தியை போக்குவதாக அது இருக்கும் என்று நாம் நம்புகின்றோம். திறமை மிக்க அனுசரணையாளர்களின் உதவியோடு, சமாதானப் பேச்சுக்களின் மூலம் பெறுமதி மிக்க தீர்வைக் காண்பதில் அரசும் புலிகளும் காட்டிவரும் உறுதிப்பாட்டையும் ஈடுபாட்டையும் நாம் மெச்சுகின்றோம். அது என்மை உற்சாகப்படுத்தியும உள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

ஈராக் யுத்தம் எங்கள் எல்லோரையும் கவலைக்குள் ஆழ்த்தியுள்ளது. குறுகிய காலத்தில் அது முடிந்துவிடும என நம்புகின்றோம். யுத்தத்தின் பின்னான நிவாரண, புனரமைப்புப் பணிகளுக்கு தனது முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டிய நிலையில், சர்வதேசசமூகம் இருக்கும்.

### போர்தரும் பின்னடைவு

ஈராக் யுத்தம் நீண்டகாலம் நீடிக்குமானால் பின்னடைவு தரும் எதிர் விளைவுகளை நாம் சந்திக்கவேண்டி நேரும். இலங்கையின் பொருளாதாரத் தரம் பாதிக்கப்படும். சமாதானப் பேச்சுக்களிலும் உதவும் நாடுகளின் கூட்டத்திலும் கூட அதன் தாக்கம் வெளிப்படும்.

என்றாலும், சர்வதேச சமூகம் ஈராக் யுத்தத்துடன் மட்டும் நின்றுவிட முடியாது. நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் உலகில் இலங்கையின் சமாதான முயற்சிகளும், முடிவு செய்யப்படும். இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளும் பிரகாசமானவையாகவே தென்படுகின்றன.

ஜப்பானைப் பொறுத்தவரை முன்னர் நாம் வழங்கிவந்த உதவிகளைத் தொடர்ந்தும் இலங்கைக்கு வழங்கி வருகின்றோம். அதையே தொடர்கின்றோம். என்றாலும் கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக எமது உதவித்திட்டங்கள் தெற்கில் - அரசுக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு மட்டுமே - மட்டுப்படுத்தப்பட்டன. அந்த உதவித் திட்டங்களைத் தொடர்ந்து வழங்கும் அதேசமயத்தில், யுத்தநிறுத்தம் ஏற்பட்டு அமைதி நிலை தோன்றியுள்ளதால் வடக்கு - கிழக்கிற்கும் எமது உதவிகளை விஸ்தரிக்க விரும்புகின்றோம். வடக்கு - கிழக்கிற்கும், தெற்கிற்கும் இடையிலான சமநிலை பாதிக்கப்படாத விதத்தில் எமது உதவிகளை விரிவுபடுத்த விளைகின்றோம்.

நாம் மேற்கொள்ளவிருக்கும் ஆறு புதிய வேலைத்திட்டங்களை கடந்த மாதம் கொழும்பில்வைத்து நான் அறிவித்தேன். அவற்றில் ஐந்து தெற்குக்குரியவை. ஒன்று மட்டும் வடக்கு - கிழக்கில் நீர்ப்பாசனம் மற்றும் தண்ணீர் தொடர்பான திட்டமாகும். எனவே, தென்பகுதி மக்கள் தங்கள் உதவித்திட்டங்களில் எமது பங்களிப்பு, உதவி குறைக்கப்படுவதாகக் கருதவோ, நினைக்கவோ கூடாது.

புரிந்துணர்வு அடிப்படையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டுமானால் முழு இலங்கையையுமே ஒன்றாக முன்னுக்குக் கொண்டுவர வேண்டும்.

### புலிகளுக்கு ஆதரவா?

ஆனால், சில கொழும்புப் பத்திரிகைகள் - ஆங்கிலப் பத்திரிகைகளையே நான் வாசிக்கமுடியும் - நாங்கள் (ஜப்பான்) புலிகளின் ஆதரவாளர்களாக மாறிவிட்டோம் எனவும் புலிகளுக்கு உதவுகின்றோம். என்றும் எழுதுகின்றன - அது தப்பு - நாங்கள் சமாதானத்தையே விரும்புகின்றோம்.

நடுநிலையான - பக்கச்சார்பு - தெளிவாக எமது வெளிநாட்டுக் கொள் கையை ஒரு பக்கச் சார்பாக விமர்சிப்பது எமக்கு கவலையளிக்கின்றது. நாம் யார் பக்கமும் சார்ந்தவர்கள் அல்ல. சமாதானத்தின் பக்கமே சார்ந்தவர்கள்.

இலங்கையின் மனித உரிமைகள் விடயத்திலும் சிறுவர் விவகாரங்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை நாம் அவதானித்துள்ளோம். விடுதலைப் புலிகளுடனான தமது ஒப்பந்தத்தை அடுத்து சிறுவர் விடயத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை யுனிசெப்பின் பிராந்தியத் தலைவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜப்பான் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனம் ஒன்று அடுத்த சில வாரங்களில் நடமாடும் சிகிச்சைநிலைய சேவையை வடக்கு - கிழக்கில் அரச மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் தெற்கிலும் நடத்தவுள்ளது. முதலில் மூன்று 'யுனிட்'டுக்கள் சேவையில் ஈடுபடும். விரைவில் அது ஐந்தாக உயர்த்தப்படும். ஜப்பானிய வைத்தியர்களும் தாதியரும் இச்சேவையில் ஈடுபடுவர். - என்றார் யசூஷி அகாஷி.

(ஐ)

# கொழும்பில் தூதரகங்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

கொழும்பு,மார்ச்21

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் துதரகங்களின் தூதுவர்கள் இராஜதந்திரிகளின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

முப்படையினரும், இந்தப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பான கூட்டம் ஒன்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் தலைமையில் நேற்று மாலை இடம்பெற்றது.

நாட்டில் இன்று எழுந்துள்ள உணர்வலைகள் காரணமாக தூதரகங்கள், இராஜதந்திரிகளின் வதிவிடங்கள் பாதுகாப்புக்கு உட்படுத்தப்படவேண்டிய இடங்களாக மாறியுள்ளன.

அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக இடம்பெறப்போவதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜும்மா தொழுகையின் பின்னர் இன்று இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களை அமைதியான முறையில் நடத்தும்படி பாதுகாப்பு அமைச்சு கேட்டிருக்கின்றது. (ஐ-3-12)

# குவைத் மீது ஏவுகணைத் தாக்குதல் பெரும் பீதி! மக்கள் ஓடத் துடிப்பு!!

குவைத் மீது ஈராக் நேற்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. நடுத்தரவீச்சு ஏவுகணைகள் இரண்டு ஈராக் படைகளினால் குவைத்தின் பாலைவனம் மீது ஏவப்பட்டது என்று குவைத் பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

இத்தாக்குதலினால் சேதம் எதுவும் ஏற்படவில்லை. ஆயினும், இதனால் குவைத்தில் பெரும் பீதி ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

குவைத் மக்கள் நாட்டைவிட்டு விரைவில் வெளியேறத் துடிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இன்றைய ஆபத்தான நிலையில் வீடுகளைவிட்டு வெளியேறாது உள்ளே இருக்குமாறு குவைத் அரசு மக்களைக் கோரியிருக்கிறது.

குவைத் மீது தாக்குதல் நடத்தவில்லை என்று ஈராக் தெரிவித்திருக்கிறது. (ஐ)

## World Cup Score card - 2003




ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்

சிங்கர்

புதிய பார்வை

இல. 1, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி : இந்தியா

ஆட்டநாயகன் : சௌரவ் கங்குலி

முடிவு : 91 ஓட்டங்களால் இந்தியா வெற்றி

### இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| எஸ்.டெண்டுல்கர் | c/ஒபுயா | b/ரிகோலோ ..... | 83 | 101 | 5 | 1 |
| வி.சேவாக் | c/உடும்பே | b/ஒன்ஹொண்டோ ... | 33 | 56 | 3 | 0 |
| எஸ்.கங்குலி | not out | .... | 111 | 114 | 5 | 5 |
| எம்.கைவ் | run out (ஒபுயா) | | 15 | 20 | 0 | 0 |
| யுவராஜ் சிங் | c/ஒபுயா | b/ஒடோயா .... | 16 | 10 | 1 | 1 |
| ஆர்.திராவிட் | not out | | 01 | 01 | 0 | 0 |
| உதிரிகள் | | .... | 11 | | | |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | .... | 370/4 | | | |

களமிறங்காதவர்கள் : ஏ.நேஹ்ரா, ஜே.ஸ்ரீநாத், ஷஹீர்கான், ஹர்பஜன்சிங், டி.மொங்கியா

மார்டின்சுஜி : 10-01-62-0, ஓடோயோ : 10-01-45-01, ஒன்ஹொண்டோ : 10-01-38-01, ஹரீம் : 04-00-25-00, ரிகோலோ : 10-00-60-01, ஒபுயா : 06-00-40-00

### கென்யா

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| கே.ஒரினோ | c/ திராவிட் | b/ஸ்ரீநாத் .... | 15 | 43 | 1 | 0 |
| ரவீந்துஷா | lbw | b/கான் | 02 | 12 | 0 | 0 |
| பி.ஒங் ஹொன்டோ | c/ கான் | b/நேஹ்ரா .... | 00 | 05 | 0 | 0 |
| டி.ஒடோயோ | c/ சேவாக் | b/நேஹ்ரா .... | 07 | 15 | 0 | 0 |
| எஸ்.ரிகோலோ | | b/டெண்டுல்கர்.... | 56 | 83 | 5 | 2 |
| எம்.உடும்பே | c/ கான் | b/யுவராஜ்சிங் | 20 | 16 | 1 | 1 |
| எச்.மோடி | c/ திராவிட் | b/கான் .... | 09 | 25 | 0 | 0 |
| டி.ஒபுயா | run out ([illegible]) | | 03 | 23 | 0 | 0 |
| சி.ஒபுயா | | b/டெண்டுல்கர்.... | 29 | 38 | 0 | 1 |
| எம்.சுஜி | | b/[illegible] | 01 | 07 | 0 | 0 |
| ஏ.ஹரீம் | not out | .... | 00 | 00 | 0 | 0 |
| உதிரிகள் | | | 37 | | | |
| மொத்தம் | (46.2 ஓவர்கள்) | .... | 179/10 | | | |

கான் : 9.2-02-14-03, ஸ்ரீநாத் :07-01-12-01, நேஹ்ரா :5-01-11-02, ஹர்பஜயன்சிங் :10-01-33-00; யுவராஜ்சிங் : 06-00-43-01, சேவாக் 03-01-14-0, டெண்டுல்கர்: 06-00-28-02.


## இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணம் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார் பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி அவர்கள்.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 9மணிமுதல் மாலை 5மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (15691)


# முஸ்லிம்களின் தனித்தரப்புப் பற்றி ஹக்கீம் - புலிகள் நட்புறவுப் பேச்சு

ஹக்கோனி,மார்ச்21

ஜப்பானின் ஹக்கோனி பிறின்ஸ் ஹோட்டலில் அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமும் தனது உதவியாளர்கள் இருவர் சகிதம் புலிகளின் குழுத்தலைவர் மற்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கிழக்கு சிறப்புத் தளபதி கருணா ஆகியோருடன் தனிப்பட்ட முறையில் நட்புறவுப் பேச்சு நடத்தினார்.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் குழு ஒன்று தனித்தரப்பாகக் கலந்து கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையை ஹக்கீம் முன்வைத்தார்.

இந்தக் கோரிக்கைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்தார் என்று வெளிவந்த செய்திகளை கொண்டுவந்தார்.

முஸ்லிம்களும் சம்பந்தப்பட்ட அரசியல் விடயங்களை ஆராயும்போது முஸ்லிம்களும் தனித்தரப்பாகப் பங்குபற்றவேண்டிய தேவை இருக்கின்றது என்பதைப் புலிகள் ஒப்புக்கொண்டார்கள்.

என்றாலும் இது விடயத்தில் தலைவர் பிரபாகரனே முடிவு எடுக்கவேண்டும். அதற்கு முன்னர் முஸ்லிம் தலைவர்களுடன் தலைமை தலைமைப் பேச்சுநடத்தவேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

முஸ்லிம் தலைவர்களோடு பேச்சு நடத்துவதற்கு அன்ரன் பாலசிங்கமும வன்னிக்கு வரவேண்டும் அவர் அடுத்த மாதம் 29ஆம் திகதிமுதல் மே 2ஆம திகதிவரை தாய்லாந்தில் நடைபெற இருக்கும் 7ஆவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொண்ட பின்னரே வன்னிக்கு வரஇருக்கிறார்.

இதன்படி அடுத்த 7ஆவது சுற்றுப் பேச்சுக்களிலும் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்ளும் வாய்ப்பு இல்லை.

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்குப் புலிகளும் இணக்கம் தெரிவிக்கவேண்டும் என்று அமைச்சர் ஹக்கீம் கேட்டுக்கொண்டார். வேண்டிய சட்ட ஏற்பாடுகளைச் செய்து, முன்னர் தாக்கல் செய்யப்பட்ட நியமனப் பத்திரங்களை ரத்துச் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்ற ஒரு தகவலையும் அவர் அங்கே கசியவிட்டார். அதை ஆலோசித்து முடிவுசெய்வோம் என்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். (ஐ-3)

# சதாமே இலக்கு!

வாஷிங்ரன்,மார்ச்21

ஈராக் தலைநகர் மீது அமெரிக்கா நேற்று விடிகாலைப் பொழுதில் ஆரம்பித்த தாக்குதல்கள் அதிபர் சதாம் ஹுசையினை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்டிருப்பதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். காலையில் நடத்தப்பட்ட முதற்கட்டத் தாக்குதல்களினால் பக்தாத்தில் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. அமெரிக்க உளவுத்துறை வழங்கிய தகவல்களின் அடிப்படையில் ஈராக் தலைவர்களின் இருப்பிடங்கள் இலக்கு வைக்கப்பட்டன என்று அமெரிக்க அரச வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும், இலக்குகள் எவை என்ற விவரத்தை அவை வெளியிடவில்லை.

ஈராக்கின் இராணுவ கேந்திர நிலையங்கள் பல தலைநகருக்கு வெளியே அமைந்திருக்கின்ற போதிலும், அவற்றை விட்டுவிட்டு அமெரிக்கா நேரடியாக தலைநகர் பக்தாத்தைச் சூழவுள்ள புறநகர்ப் பகுதிகள் மீது குண்டுகளைப் பொழிந்து தாக்கி வருகின்றது.

அதிபர் சதாம் ஹுசைய்னின் இருப்பிடங்கள் மற்றும் அரச கட்டடங்களை அழிப்பதே அதன் நோக்கம் என்று அவதானிகள் கருதுகின்றனர். (ஐ)

# எந்த நேரத்திலும் தரையில் சண்டை

பக்தாத்,மார்ச்21

ஈராக்கில் எந்த வேளையிலும் தரையில் கடும் சண்டை ஆரம்பமாகலாம் என்று நேற்றிரவு வெளியான செய்திகள் தெரிவித்தன.

பல்லாயிரக்கணக்கான அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் வாகன அணிகளோடு ஈராக்கின் தென்பகுதிக்குள் பிரவேசிக்க தயாராகிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சுமார் 10 ஆயிரம் இராணுவ வாகனங்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் ஹொவிட்ஸர் பீரங்கிச் சத்தங்களும், றொக்கட் லோஞ்சர் ஓசைகளும் இடைவிடாது கேட்டபடி உள்ளன. (ஐ)

# இன்று ஆர்ப்பாட்டம்

ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதலைக் கண்டித்து இன்று ஜும்மாத் தொழுகைக்குப் பின்னர் லிப்டன் சுற்று வட்டப் பகுதியில் இருந்து ஆர்ப்பாட்டம் ஒன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு மாநகர சபை, சிமன்ஸ் வீதி, மருதானைச் சந்தி, பஞ்சிகாவத்தை வீதி, ஜயந்த வீரசேகர மாவத்தை, மாளிகாவத்தை ஜும்மா மஸ்ஜித் வீதியூடாக மாளிகாவத்தை ஜும்மா பள்ளிவாசலைச் சென்றடையவுள்ளது.

அங்கு பள்ளிவாசலின் முன்பாக எதிர்ப்புக் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கான அழைப்பினை மேல்மாகாண ஆளுநர் எஸ்.அலவி மௌலானா செய்திக்குறிப்பொன்றின் மூலம் விடுத்துள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா உடன் நிறுத்த வேண்டும். ஈராக் மீது தொடுக்கப்பட்டுள்ள யுத்தம் மனித உரிமைகளை மீறும் செயலாகும் ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள யுத்தம் நிறுத்தப்படும் வரை ஈராக்கிய மக்களுக்காக ஐந்து வேளைத் தொழுகைகளிலும் பிரார்த்திக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## பின்லேடனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலைப் பின்னலுடன் தொடர்புடைய முக்கிய புள்ளிகளையும் தேடிக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கை இது என்று அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பக்தாத்தில் நடக்கின்ற தாக்குதலுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று அவர்கள் கூறினர். (ஐ)

# அமெரிக்க ஹெலிக்கொப்டர் அழிப்பு!

வாஷிங்ரன்,மார்ச21

அமெரிக்காவின் விசேட படையினரை ஏற்றிச்சென்ற ஹெலிக்கொப்டர் ஒன்று ஈராக்கின் தென்பகுதியில் அவசரமாகத் தரையிறங்கியது என்று பென்ரகன் தெரிவித்திருக்கிறது.

அந்தக் ஹெலியில் இருந்து விமானப் படையினரும் இராணுவத்தினரும உடனடியாகவே மற்றொரு ஹெலிக்கொப்டர் மூலம் மீட்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தரையிறங்கிய ஹெலி, ஈராக்கியப் படைகளிடம் சிக்கிவிடாதிருப்பதற்காக அது அந்த இடத்திலேயே அழிக்கப்பட்டது என்று அமெரிக்க அதிகாரிகள் கூறினர். (ஐ-12)

# அதிபர் புஷ் வாஜ்பாயுடன் தொடர்பு

புதுடில்லி,மார்ச்21

தாக்குதல் ஆரம்பித்த சில மணி நேரத்தின்பின் அமெரிக்க அதிபர் புஷ் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடினார்.

ஈராக் மீதான நடவடிக்கைகளுக்கு, இந்தியாவின் ஆதரவை புஷ் கோரினார் என்று பிரதமர் அலுவலக பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை -

வளைகுடா நிலவரம் பற்றி ஆராய்வதற்காக பிரதமர் வாஜ்பாய் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றை நாளை சனிக்கிழமை கூட்டுகிறார். (ஐ)


HS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

காலம் : 23.03.2003

காலை 10.00 மணி

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்

HS. யாழ்ப்பாணம்.

LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு - யாழ்ப்பாணம்

பாதுகாப்பான – சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்

யாழ்ப்பாணம்

# 1-T, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0777-733992

(C/25688)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கடை விற்பனைக்கு

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் விசாலமான தகரக் கடை ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: பூ.சந்திரகாந்தா, இல.90, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(15754)

## புறாக்கள் விற்பனைக்கு

பான்டெயில், ஜிப்சன், சைனா, கறண புறாக்கள் விற்பனைக்குண்டு. ந.வரதராசா, C/o V.இராசரத்தினம் (மினிபஸ் உரிமையாளர்), சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் (சுன்னாகம் புகையிரத நிலையம் அருகில்).

(15755)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 34 வயதுடைய, செவ்வாய்க் குற்றமற்ற, உத்தரம் 2ஆம் பாதமும, 16 கிரகபாவமும் உடைய, சுவிஸில் பிரஜா உரிமைபெற்ற மகனுக்கு பெற்றோர் கல்வியறிவும் அழகும் உள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர். படத்துடனும், ஜாதகத்துடனும தொடர்புகொள்ளவும். ஆ.சி.ஆழ்வாப்பிள்ளை (மனேஜர்), பெரியதெணி, வியாபாரி மூலை, பருத்தித்துறை.

(15746)

## சங்கீதம்

கிருஷ்ணவேணி மயில்வாகனம் எழுதிய தரம் 10, க.பொ.த. (சா.த.) பத்திரசக் கீர்த்தனைகள் என்னும் புத்தகங்கள் யாழ்ப்பாணப் பிரபல புத்தகசாலைகளில் விற்பனைக்குண்டு. இவை சங்கீதசபைப் பாடத்திட்டத்திற்கும் பொருத்தமானவை.

(15769)

## ஆங்கில வகுப்பு

மிகவும் இலகுவான முறையில் அடிப்படையிலிருந்து இலக்கணத்துடன ஆங்கிலம் கற்பிக்கப்படும். வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கலாம் தொடர்பு: இ.தேவதாஸ், இல.560, கே.கே.எஸ். வீதி (அரசடி பிள்ளையார் கோயில் முன்பாக), யாழ்ப்பாணம். (15752)

---

உ

## பூப்பொழிந்து – புனிதப்பணி வாழ்த்தி பூரித்தோம் வாழி! வாழி!

**உயர்திரு. கந்தையா சந்திரசேகரா (ஜே.பி.)**

(B.A.(Cey.) Dip.in Ed. SLPS -I

(முன்னாள் முதல்வர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)



*தென்மராட்சியின் தேசியச் சொத்து சாவ. இந்து!*
*இந்து நிமிர்ந்தால் – இனிய சாவயூர் நிமிரும்*
*இந்த உண்மையை உணர்ந்து நீங்கள் ஆற்றிய சேவை*
*என்றும் ஜொலிக்கும்! இதயங்கள் வாழ்த்தும் வாழிய! வாழ்க!*

*ஒறுத்தலை நீக்கி – பொறுத்தலைக் காட்டினீர்!*
*உண்மைப் பற்றுடன் – உழைப்பினை ஈந்தீர்!*
*வேதனை சூழ்ந்த காலங்கள் தன்னிலும் – கல்விச்*
*சாதனை படைக்க வழிகள் காட்டினீர்!*

*வெற்றியான பின்பும் உம் வெற்றிகள் நாட்டினீர்!*
*வென்ற உம் கொள்கையை – விரும்பு பணிகளை*
*இன்று – நாம் வாழ்த்தி உவந்தோம் – வாழிய!*
*இந்துவின் புகழ்போல் ஏற்றமாய் வாழிய!*

வாழ்த்தி மகிழும்:
பழைய மாணவர் சார்பில்
சாவகச்சேரி. (15779) மா.தயாளன்

---


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2513856 இருந்து
2531392 வரை
சீட்டிழுப்பு இல. 1385
திகதி 19.03.2003

## வெற்றி எண்கள்

**08 12 22 42 47**

போனஸ் எண் **16**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.1,500,000/-** வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 107 | 10,000/- | 1,070,000/- |
| 3 | 5,505 | 500/- | 2,752,500/- |
| 2 | 91,193 | 20/- | 1,823,860/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 08ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 111,833 | 10/- | 1,118,330/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,464,690/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

**ரூபா.1,500,000/-**

தொடர் இல. 351Ø40க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 மார்ச் 22ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில்
பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில்
தங்கப்பரிசு வெற்றி பெறும்
5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2528267-1-34
2523935-7-53
2520541-6-20
2530284-5-74
2525054-0-63

PHOENIX O&M


---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி -2003

காலம்: 22.03.2003 சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணி

பிரதம விருந்தினர்:
**திரு. சி.சிவசுந்தரம் அவர்கள்**
*(சிறைச்சாலை அத்தியட்சகர்)*

பரிசில் வழங்கல்:
**திருமதி யசோதராதேவி சிவசுந்தரம் அவர்கள்**

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

*யாழ்.இந்துக் கல்லூரி.* (C/37035) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

---

## புதிய அனுமதிகள்

தரம் 08, 09 இற்கான மேலதிக பிரிவுகள் ஆரம்பமாவதால் மேற்படி வகுப்புகளுக்கு மட்டும் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

*The Express Institute*
Irupalai, Kopay.

(15776) - அதிபர்.

---

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

**முக்கிய அறிவித்தல்**

யாழ்.மாவட்ட ஆலோசனைக் கூட்டம்

தலைவர்: உயர்திரு. அ.விநாயகமூர்த்தி எம்.பி.
காலம்: எதிர்வரும் 23.03.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
இடம்: காங்கிரஸ் இல்லம். 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

தி.மகேந்திரராசா
பொதுச் செயலாளர்

(15774)

---

ஓம் விராட் விஸ்வபிரமனே நமக

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1992 - 12 - 07



மறைவு 2001 - 04 - 09

**செல்வன் தவேந்திரன் கார்த்தீபன்**

2003.03.21

இரண்டு ஆண்டுகள் மறைந்தோடிப் போனாலும்
பண்பு மிகு மகனே கார்த்தீபா!
உன் பாசமுகம் மறப்போமா?
நீ இருந்த வாழ்நாளில் நிம்மதியாய் வாழ்ந்தோம்
நீ இல்லாத உலகினிலே நிதம் கலங்கி நிற்கின்றோம்.

*ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*சந்தை வீதி,*
*இலையாணன், உடுப்பிட்டி.*

அ.தவேந்திரன்
(சோக்கர்) குடும்பத்தினர்.

(15783)

---

# மரண அறிவித்தல்கள்

## மூத்ததம்பி குணசிங்கம்

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.132, குமரபுரம், பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி குணசிங்கம் நேற்று (20.03.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*இல.132 குமரபுரம்,*
*பரந்தன்.* (15781)

தகவல்:
சு.தம்பிஐயா.

## சவரிமுத்து நீக்கிலாப்பிள்ளை

(இளைப்பாறிய புகையிரத நிலைய உத்தியோகத்தர்)

கரணவாய் கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும், தற்பொழுது கொழும்பு, கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து நீக்கிலாப்பிள்ளை அவர்கள் நேற்றுமுன்தினம் 19.03.2003 காலமானார்.

அன்னார் மரியமுத்து (நவரட்ணம்)வின் அன்புக் கணவரும், றொக் ரூபகுமார் (கனடா), அன்ரன் அமலகுமார் (கனடா), மரியஜெனி (சுவிஸ்), பஸ்ரியன் பிரதீப்குமார் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பிலிப்பாக்கியம், மனுவேற்பிள்ளை, மரியம்மா, காலஞ்சென்ற சாமிநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவரத்தினா வாசம்,*
*கரணவாய் கிழக்கு.* (சி-37034)

தகவல்:
அ.கிரேஸ் ருக்குமணி
*(மருமகள்)*

# சதாமிடம் இருந்து ஈராக்கை விடுவிக்கவே இந்த யுத்தம்!

வாஷிங்ரன்,மார்ச்21

சர்வாதிகாரி சதாம் ஹுசைனிடம் இருந்து ஈராக்கை விடுவிக்கவும் உலக நாடுகளை அவரது அச்சுறுத்தலில் இருந்து காப்பாற்றிக் கொள்வதற்குமாகவே இந்தப் போரை ஆரம்பித்துள்ளதாக அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

ஈராக் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அவர் அமெரிக்க மக்களுக்குத் தொலைக் காட்சி மூலம் உரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்தார்.

உரையின் போது அவரது பாவனை அழுத்தம் திருத்தமாக இருந்தது. நின்று, நிதானித்து உரையாற்றினார் அவர்.

அவர் தன் உரையில் தெரிவித்ததாவது:-

ஈராக் மீதான போர் ஆரம்பித்து விட்டது. எனது உத்தரவை ஏற்று அமெரிக்கப் படைகளும் அதன் நேச நாட்டுப் படைகளும் ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்களை அழிக்கும் பணியை ஆரம்பித்து இருக்கிறார்கள்.

சர்வாதிகாரி சதாமிடம் இருந்து ஈராக்கை விடுவிக்கவும் உலக நாடுகளைக் காப்பாற்றுவதற்காகவுமே இந்தப் போரை நாம் ஆரம்பித்துள்ளோம்.

மிகச் சரியாகத் திட்டமிட்டு குறிப்பிட்ட சில இடங்களை மட்டுமே குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றார்கள்.

இந்தப் போர் மிகக் குறுகிய காலத்தில் முடிவுக்கு வந்துவிடும். அதன் பின்னர் நாம் ஈராக் மக்களைக் கைவிட்டுவிடமாட்டோம். ஈராக் மக்களைக் காப்பதிலும் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் ஒவ்வொரு அமெரிக்கக் குடிமகனுக்கும் ஏனைய உலக நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் கடமை இருக்கின்றது.

எங்கள் நடவடிக்கைக்கு 35இற்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவு அளிக்கின்றன. விமானத் தளங்களையும் அவர்கள் தந்து உதவியுள்ளனர். சிலர் படைகளையும் அனுப்பி வைத்துள்ளனர். புலனாய்வு மற்றும் தகவல் தொடர்பு உட்பட பல வகைகளிலும் அந்த நாடுகள் உதவி வருகின்றன.

போரை நேருக்கு நேர் சந்திக்க முடியாத சதாம் ஹுசைன், பெண்கள் மற்றும் குழந்தைகளை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தத் திட்டமிட்டு இருக்கிறார். எனவே, அமெரிக்காவும் ஏனைய நாட்டுப் படையினரும் மிகக் கவனமாக இந்தப் போரில் செயற்படுவார்கள்.

அப்பாவிப் பொது மக்கள் வசிக்கும் பகுதியில் சதாம் ஹுசைன் பயங்கர ஆயுதங்களைக் குவித்து வைத்திருக்கிறார். தனது நாட்டு மக்களின் உயிருக்கு அவர் ஆபத்தை விளைவிக்கின்றார்.

போர் விதிமுறைகளை மீறி நடந்து வருகின்றது ஈராக். இதை அனுமதிக்க முடியாது. எதிரிகளை அழித்தே தீருவோம்.

ஈராக்கில் அமெரிக்கத் தூதரகங்களில் யாரும் இல்லை. அங்குள்ள பத்திரிகையாளர்களையும் வெளியேறுமாறு ஏற்கனவே எச்சரித்துள்ளோம்.

போர் தொடங்கப்பட்டுவிட்டதால் அமெரிக்க மக்களுக்கு ஏற்படக் கூடிய அபாயங்களைப் போக்கவும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றோம்.

- இப்படி அதிபர் புஷ் தெரிவித்தார்.

போர் ஆரம்பித்ததும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் தனது நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் உரையாற்றினார். அப்போது அவர் போரை நியாயப்படுத்திப் பேசினார். எனினும் ஈராக் மீது தரைவழித தாக்குதலை நடத்த துருப்புக்களுககு இன்னும் உத்திர விடப்படவில்லை என்றார் பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவர்.(ம)



புஷ் தொலைக்காட்சியில் உரை



பரபரப்பாக தாக்குதலுக்கு தயாராகும் அமெரிக்க விசேட கொமாண்டோக்கள்.

# இஸ்ரேல் தூதரகங்கள் பலப்படுத்தப்படுகின்றன

டெல்அவிவ்,மார்ச்21

ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா ஆரம்பித்துள்ளதை அடுத்து இஸ்ரேல் தனது தூதரகங்களின் பாதுகாப்பை அதிகரித்துள்ளது. உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள இஸ்ரேலிய வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தூதரகங்கள் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள தூதரகங்களுடன் நேற்றுக் காலை 'வீடியோ கொன்பரன்ஸிங்' முறை மூலம் தொடர்புகொண்டு பேசிய இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பெஞ்சமின் நெத்தன்யாகு, அவர்களை முழு உஷார் நிலையில் இருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

ஈராக் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அடுத்து இஸ்லாமியத் தீவிரவாதிகள் இஸ்ரேலிய இலக்குகள் மீது தாக்குதல் நடத்தக்கூடும் என்று இஸ்ரேலிய அரசு எதிர்பார்க்கின்றது. அதனை தவிர்க்கும் வகையிலேயே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1991இல் நடந்த வளைகுடாப் போரின் போது ஈராக் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது. இம்முறை அப்படி நடப்பதற்கு ஒரு சதவீதமே சாத்தியங்கள் இருப்பதால் பாடசாலைகள் மூடப்படமாட்டா என்று இஸ்ரேலிய கல்வி அமைச்சர் தெரிவித்தார். எனினும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாதுகாப்பு முகமூடிகளை அணிந்து செல்லுமாறும் அவர் கேட்டுள்ளார். சில வேளைகளில் இஸ்ரேல் மீது உயிரியல் அல்லது இரசாயன ஆயுதத் தாக்குதல் நடத்தப்படலாம் என்று கருதப்படுகின்றது. (ம)



ஒருபுறத்தில் அமெரிக்க தாக்குதல் நடந்தாலும் ஈராக்கியரின் நாளாந்த செயற்பாடு பெருமளவில் பாதிக்கப்படவில்லை.

தண்ணீர் எடுத்துச் செல்லும் ஒருவர்.

# ஈராக்குக்கே இறுதி வெற்றி: தொலைக்காட்சியில் சதாம்!

குவைத்சிற்றி,மார்ச்21

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டுள்ள தாக்குதலில் தமக்கே இறுதி வெற்றி என்று அதிபர் சதாம் ஹுசைன் தெரிவித்தார்.

அமெரிக்கத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட மூன்று மணி நேரத்தின் பின்னர் ஈராக் தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றினார்.

வழமையான தனது இராணுவ உடையுடன் அவர் தோன்றினார். மிக அமைதியாக, பதற்றமின்றிக் காணப்பட்டார். அரபு மொழியில் பேசினார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

நமது நாட்டின் மீதும் நமது மக்கள் மீதும் அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகின்றது. இவர்கள் நமது எதிரிகள். கடவுளுக்கு எதிரானவர்கள். அமெரிக்காவை மன்னிக்க முடியாது. உலக நாடுகளும் அதனை மன்னிக்காது.

அமெரிக்காவின் இந்தத் தாக்குதலைக் கண்டு பயப்படாதீர்கள். கடவுள் உங்கள் பக்கம் இருக்கிறார். எதிரிகளை வீழ்த்த வீறுகொண்டு எழுங்கள். வெற்றி நமதே. இந்த நம்பிக்கையோடு போரிடுங்கள்.

இறுதி மூச்சு உள்ளவரை கத்தி, வாள் மற்றும் ஈட்டிகொண்டு சாத்தான் புஷ்ஷுக்கு எதிராகப் போரிடுங்கள். நமக்குக் கிடைக்கும் வெற்றி நீதிக்குக் கிடைக்கும் வெற்றி. நமது பலம் முழுவதையும் பயன்படுத்துவோம். கடவுள் அருள் நிச்சயம் கிடைக்கும்.

நண்பர்களே! நாம் அமைதியை விரும்புகின்றோம். ஜோர்ஜ் புஷ் அமைதியை விரும்பும் நபர் அல்லர். அமெரிக்காவின் திட்டம் வெற்றிபெறாது.

புஷ் ஒரு சின்னப் பையன். அவர் ஒரு கிரிமினல் குற்றவாளி. மனித குலத்துக்கு எதிரானவர். அமெரிக்காவின் தாக்குதல் வெட்கக் கேடானது.

அமெரிக்காவுக்கு எதிராகப் புனிதப்போர் நடத்த ஈராக் மக்கள் தங்கள் முழுப் பலத்தையும் பயன்படுத்துவார்கள். ஈராக்குக்கே இறுதி வெற்றி.

வெற்றிபெற மாட்டோமா என்று எதிரிகள் பொறுமையிழந்து, நம்பிக்கை இழந்து துவண்டு போகும் நிலைக்கு அவர்களைத் தள்ளுவோம். அவர்களைத் தோற்கடிப்போம். ஈராக் வாழ்க! பலஸ்தீனம் வாழ்க! சமாதானத்தை விரும்புவோர் வாழ்க!

- இவ்வாறு உரையாற்றினார் சதாம்.

ஈராக்கின் தகவல்துறை அமைச்சர் முஹமது சயீத் அதிபர் சதாமின் உரையை ஆரம்பித்து வைத்தார். அமெரிக்காவின் போர் நடவடிக்கை சர்வதேச விதிமுறைகளை அப்பட்டமாக மீறும் செயல். இது கொள்ளையடிக்கும் செயல் என்றார் அவர்.

அதிபர் சதாமின் உரை நேரடியாக ஒளிபரப்பாக சாத்தியம் இல்லை என்று கூறப்படுகின்றது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட உரையே ஒளிபரப்பாகி உள்ளதாக கருதப்படுகின்றது. (ம)



சதாமின் உரையை செவிமடுக்கும் ஈராக்கியர்கள்

## மிக விரைவில்

# யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்

## பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

பரிஸ்,மார்ச்21

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டிருக்கும் தாக்குதலை பிரான்ஸ் மிகமிக உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருப்பதாகவும் இயலுமான விரைவில் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

"ஈராக்கில் முதலாவது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை பிரான்ஸ் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருகின்றது" - என்று அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போருக்கு எதிராகக் குரல் கொடுப்பதில் பிரான்ஸ் எப்போதுமே முன்னணியில் இருந்து வந்துள்ளது. ஐ.நாவில் போருக்கு ஆதரவான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் அதற்கு எதிரான தனது வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்துவேன் என்றும் அது முன்னர் மிரட்டியிருந்தது.

"போர் இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே அதனை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்று பிரெஞ் அரசாங்கம் கருதுகின்றது. அதற்காக இந்தப் போரை வளைகுடாப் பகுதியில் உள்ள எந்த நாடும் இந்தப் போரினை ஊக்குவிக்காமல் இருக்கவேண்டும் என்றும் பிரெஞ் அரசு கேட்டுள்ளது" - என்று வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் பிரதமர் போர் குறித்து அவசர கலந்துரையாடல் ஒன்றை உதவியாளர்களுடன் நடத்தியிருக்கின்றார்.

இதற்கிடையில் -

போரினை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆங்காங்கே மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரான்ஸ் அதிபர் ஜக் ஷிராக் தெரிவித்துள்ளார். சர்வதேச நாடுகளுக்கிடையில் இவ்வாறு ஆரம்பமாகும் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு அவ்வப்போது இத்தகைய பிரசார நடவடிக்கைகள் தேவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# கியூப விமானம் கடத்தல்

புளோரிடா,மார்ச்21

கியூபாவில் உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்த விமானம் ஒன்று 6பேரால் பலவந்தமாகத் திசைதிருப்பப்பட்டு அமெரிக்காவில் தரையிறக்கப்பட்டது. அந்த விமானம் கடத்தப்பட்டதாக கியூப அதிகாரிகள் தெரிவித்தனர்.

நடுவானில் பறந்துகொண்டிருந்த சமயம் விமானம் திடீரென பலவந்தமாகத் திசைதிருப்பப்பட்டது.

ஈராக் போர் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தீவிரவாதிகள் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் எழுந்துள்ள நிலையில் விமானம் கடத்தப்பட்டது. இது குறித்து கியூப அதிகாரிகள் உடனடியாக அமெரிக்காவுக்குத் தெரியப்படுத்தினர்.

உடனடியாக அமெரிக்க போர் விமானங்கள் உஷார் நிலையில் வைக்கப்பட்டன. அமெரிக்காவுக்குத் தகவல் கிடைத்த சிறிது நேரத்தில் அமெரிக்காவின் புளோரிடா விமான நிலைய 'ராடரில்' விமானம் தோன்றியது. அமெரிக்கப் போர் விமானங்கள் விரைந்து சென்று அந்த விமானத்தை வழிமறித்து புளோரிடாவில் தரையிறக்கின.

பின்னர் 6பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் அமெரிக்காவில் தஞ்சம் கோர விரும்பும் கியூப நாட்டவர்களே தவிர கடத்தல்காரர்கள் அல்லர் என்று அமெரிக்க எவ்.பி.ஐ. அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், கடத்தல்காரர்களின் நோக்கம் என்னவென்பது தெளிவாகத் தெரியவில்லை. கியூபாவில் இருந்து அமெரிக்காவில் தஞ்சமடைய விரும்பிய பலர் முன்னர் பலதடவைகளும் இவ்வாறு விமானத்தை கடத்திச் சென்று அமெரிக்காவில் தரையிறங்கி உள்ளனர். (ம)




கடத்தப்பட்ட விமானம் புளோரிடா



ஈராக் போர் பற்றிய செய்திகளை செவிமடுக்கும் ஆப்கானியர்.

# ஈராக் போர் ஆரம்பம்!

## குரூஸ் ஏவுகணை மாதிரி




**குரூஸ் ஏவுகணைகளின் முக்கிய பகுதிகள்**

1. புற ஊதாக் கதிர்களைக் கொண்டு விம்பங்களை உணரும் கருவி. (infrared imagery sensor). 2. இலக்குகளை வழிகாட்டும் அமைப்பு. (guidance system), 3. வெடிகுண்டுகள் அடக்கப்படும் பகுதி (warhead), 4. எதிரியின் நிலைகளை மினுமினுப்பான படங்கள் மூலம் வெளிப்படுத்தும் டிஜிட்டல் கருவி. (digital scene matching illuminator), 5. பிரதான எண்ணெய் தாங்கி. (main fuel tank), 6. பூகோள அமைப்பைக் கொண்டு நிலைமைகளை ஒப்பிடும் அமைப்பு. (terrain matching system) 7. ஒலியின் வேகத்தில் செல்லக்கூடிய 'டேர்போ ஜெட்' இயந்திரம். (turbojet subsonic engine)

ஏவுகணையின் நீளம் 18அடி 3 அங்குலம் (5.56மீற்றர்), நிறை 1,315 கிலோகிராம், காவிச்செல்லக்கூடிய குண்டின் நிறை 454 கிலோகிராம். செல்லக்கூடிய தூரம் 1,000 மைல் (1,609கிலோமீற்றர்) வேகம்-மணிக்கு 550 மைல் (மணிக்கு 880 கிலோமீற்றர்)

அமெரிக்கா,வாஷிங்ரன்,மார்ச்21

ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் நாட்டைவிட்டு வெளியேற அமெரிக்கா வழங்கிய 48மணிநேர அவகாசம் இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 7.00 மணியுடன் முடிவடைந்ததை அடுத்து அமெரிக்கத் துருப்புக்கள் ஈராக் மீதான தாக்குதலை ஆரம்பித்துள்ளன. கடலில் தரித்துள்ள போர்க் கப்பல்களில் இருந்து தலைநகர் பக்தாத்தைக் குறிவைத்து 'குரூஸ்' ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. எவ்-117 குண்டு வீச்சு விமானங்களும் ஈராக்கிய இராணுவ நிலைகளைக் குறிவைத்துத் குண்டுவீசி வருகின்றன.

"ஈராக் சுதந்திரத்துக்கான நடவடிக்கை" - என்று அமெரிக்க இராணுவ நடவடிக்கைக்குப் பெயரிடப்பட்டுள்ளது. பக்தாத் நேரப்படி காலை 5.34 மணியளவில் முதலாவது தாக்குதல் நடத்தப்பட்டது.

ஈராக் மீதான போர் ஆரம்பமாகிவிட்டது என்ற தகவலை வெள்ளை மாளிகைப் பேச்சாளர் அரி பிளிஷியர் முதலில் அறிவித்தார். அதன் பின்னர் நேற்றுக் காலை இலங்கை நேரப்படி 9.00 மணியளவில் அதிபர் புஷ் ஈராக் போர் குறித்து தனது மக்களுக்கு உரையாற்றினார். முக்கிய இராணுவ நிலைகளை மட்டுமே குறிவைத்துத் தாக்குதல் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஈராக் மீதான தாக்குதல் தொடரும் என்று தெரிவித்த புஷ் அதிபர் சதாமை பதவியில் இருந்து அகற்றுவதற்காகவே இந்தப் போர் என்றும் சொன்னார். சதாமிடம் இருந்து ஈராக்கிய மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கும் என்றும் புஷ் கூறினார். தமது இராணுவத்தினர் கௌரவமாகவும் மனிதாபிமானத்துடனும் நடந்துகொள்வார்கள் என்றும் உறுதி கூறினார்.

தலைநகர் பக்தாத்தில் விமானக் குண்டுவீச்சுச் சத்தங்களும், ஏவுகணைகள் வீழ்ந்து வெடிக்கும் பேரோசையும் ஈராக்கிய விமான எதிர்ப்புப் பீரங்கிகளின் முழக்கங்களும் இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன. இழப்புக்கள் குறித்து உடனடியாகத் தெரியவரவில்லை. (ம)

## குரூஸ் ஏவுகணை!

ஈராக்குக்கு எதிரான போரில் அமெரிக்காவால் தற்போது பயன்படுத்தப்படும் குரூஸ் ஏவுகணைகள் போர்க் கப்பல் மற்றும் விமானங்களிலிருந்து ஏவக்கூடியது. 1991ஆம் ஆண்டு நடைபெற்ற வளைகுடா யுத்தத்தின் போதும் இந்த ஏவுகணைகள் அமெரிக்காவின் சார்பில் மிக முக்கிய பங்காற்றியுள்ளன.

ஏவப்பட்டபின் கணனி மற்றும் செய்மதிகளின் கட்டளைகள் மூலம் வழிநடத்தப்படும் இந்த ஏவுகணை குறிக்கப்பட்ட இலக்கை பிசகின்றித் தாக்கி அழிக்கும். சாதாரண விமானங்களிலும் எடுத்துச் சென்று வீசக்கூடியது. சாதாரணமாக குரூஸ் ஏவுகணைகள் (சீனர்களால் தயாரிக்கப்பட்டது) 60 மைல்கள் (100 கிலோ மீற்றர்) தூரம் சென்று தாக்கக்கூடியன. ஆனால், அமெரிக்காவின் குரூஸ் ஏவுகணைகள் குண்டுகளைக் காவிக் கொண்டு ஆயிரம் மைல்கள் (1,600 கிலோ மீற்றர்) தூரம் வரை சென்று தாக்கவல்லன. மிகக் குறுகிய தூரத்தில் உள்ள இலக்கையும் மிகச் சரியாகத் தாக்கி அழிக்கவல்லவை அவை.

ஒவ்வொரு ஏவுகணையும் 10 லட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியானவை. அதனை 6லட்சம் டொலர்களாகக் குறைப்பதற்கு முயற்சிக்கப்பட்டுவருகின்றது.

வானில் இருந்து தரையிலக்குகளைத் தாக்குவதற்கு பொதுவாக அமெரிக்காவின் பி-52 (B-52) விமானங்களே இந்த ஏவுகணைகளைத் தாங்கிச் செல்லும். குரூஸ் ஏவுகணைகளின் அடுத்த தலைமுறையையும் உருவாக்குவதற்கு இப்போது திட்டமிடப்படுகின்றது. அந்தத் திட்டத்தின் படி தரை இலக்கு ஒன்றை குறிவைத்து ஏவுகணை செலுத்தப்படும் போது அந்த இலக்கு ஏற்கனவே தாக்கி அழிக்கப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் கடைசி நேரத்தில் - ஏவுகணை இலக்கைத் தாக்குவதற்கு முன்னர் - அதனை மீண்டும் தளத்துக்குத் திருப்பி அழைத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் அது வடிவமைக்கப்படவுள்ளது. (ம)



அமெரிக்கா ஈராக் மீதான தாக்குதலை ஆரம்பித்ததை அடுத்து பக்தாத் மீது தீவிர குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. எவ்-117 விமானம் ஒன்று 'லேசரால்' வழிநடத்தப்படும் குண்டு ஒன்றை பக்தாத் மீது வீசும்போது எடுக்கப்பட்ட படம் இது.

## ஈராக் சிப்பாய்கள் 18 பேர் சரண்!

குவைத் சிற்றி,மார்ச்21

ஈராக்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தத் தொடங்கியதும் 18 ஈராக்கிய இராணுவத்தினர் எல்லையைக் கடந்து வந்து குவைத்தில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவத்திடம் சரணடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எமிரேட்ஸிலுள்ள அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளன. இரு குழுக்களாக வந்து இவர்கள் சரணடைந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இருவர் கொண்ட குழு முதலில் வந்ததாகவும் 16 பேரைக் கொண்ட குழு அடுத்ததாக வந்ததாகவும் அவர்கள் கூறினர். அவர்கள் அனைவரும் விசாரணைகளுக்குப் பின்னர் குவைத் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - ஈராக்கிய செய்தி தொடர்பு அலைவரிசைகளை அமெரிக்கா சீர்குலைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. போர் ஆரம்பித்ததும் ஈராக்கிய தொலைத் தொடர்பு சாதனங்களை இடைமறித்துக் கேட்டதில் "இந்த நாளுக்காகத்தான் காத்திருந்தோம்" என்று அதில் அறிவிக்கப்பட்டதாக அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

உலக அரங்கில்

## அமெரிக்காவின் நடவடிக்கைக்கு ரஷ்யா, ஜேர்மனி, சீனா கண்டனம்

பேர்லின்,மார்ச்21

ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதலை ரஷ்யா, ஜேர்மனி, சீனா உட்பட பல நாடுகள் கடுமையாகக் கண்டித்துள்ளன.

அமெரிக்காவின் நடவடிக்கை மிகவும் ஏமாற்றம் அளிக்கின்றது. இந்தப் போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்க வேண்டி ஏற்படலாம். மேலும் ஆயிரம் ஆயிரம் பேர் காயமடைய வேண்டி ஏற்படும் என்று அந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

போரைத் தவிர்க்க மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திரரீதியான முயற்சிகள் தோல்வியடைந்தமை மிக வருத்தமளிப்பதாக ரஷ்ய அரச வட்டாரங்கள் தெரிவித்தன என்று 'இன்டர்போல்' செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டது.

சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் உலக ஒழுங்கையும் அமெரிக்கா மீறிவிட்டது என்று சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

'போரினால் பாதிக்கப்படும் அப்பாவிப் பொதுமக்களுக்கு உதவுவதற்கான பணியில் ஐ.நா விரைந்து ஈடுபடவேண்டும் என்றும் -

ஈராக்கின் இறையாண்மை பாதுகாக்கப்பட்டு ஒன்றுபட்ட ஈராக் உருவாக்கப்படவேண்டும் என்றும் -

பேர்லினில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் ஜேர்மனி தெரிவித்துள்ளது. (ம)

## சட்ட விரோத செயல் என்று ஈராக் குற்றச்சாட்டு

ஐ.நாவின் அனுமதி இன்றி ஈராக் மீது அமெரிக்கா தன்னிச்சையாகத் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பது சர்வதேசச் சட்டங்களை மீறிய செயல் என்று ஈராக் கூறியுள்ளது.

இந்த விவகாரத்தை ஐ.நாவிடமும் பாதுகாப்புச் சபையிடமும் கொண்டு செல்லப்போவதாக ஈராக் கூறியுள்ளது.

இது அமைதி நிலையைக் குலைக்கும் செயல். நாளையே இதனை பாதுகாப்புச் சபையில் எழுப்புவோம் என ஐநாவுக்கான தூதர் முஹம்மது அல்துரி இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஐ.நா கோட்பாடுகளுக்கு எதிராகவும் சர்வதேச விதிகளை மதிக்காமலும் அமெரிக்கா செயற்படுகின்றது என்பதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த ஈராக் விரும்புகின்றது' என்றும் அவர் மேலும் சொன்னார். (ம)



பக்தாத்தில் ஏவுகணை விழுந்து வெடித்ததில் கிளம்பிய தீச்சுவாலை வட்டக் குறிக்குள்



மகாஜனக் கல்லூரி அணி

இருப்போர் (இடமிருந்து வலம்)

திரு.சி.தேவகுமார் (பொறுப்பாசிரியர்), திரு.க.காராளசிங் கம் (விளையாட்டுத் துறைத் தலைவர்), என். பிரபு (அணித் தலைவர்), திரு.பொ.சுந்தரலிங்கம் (அதிபர்), டி.ரவிசங்கர் (உதவி அணித்தலைவர்), ஜெயதீபன் (பயிற்றுநர்), சி.ஆரூரன்.

நிற்போர் (இடமிருந்து வலம்)

ஜெ.ஜெயப்பிரியந்தன், நிஷாந்தன், தி.நேசகோபன், ஆர்.ரவிசாந், எஸ்.சிவரதன், பார்த்தசாரதி, இ.ராஜகாந்தன், கே.அன்பழகன், பாலகிருஷ்ணன், ஆர்.ராஜேஸ்வரன், ரி.ராஜீவ், பி.அச்சுதன், பி.ஜீவசங்கர்.



ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி

இருப்போர் (இடமிருந்து வலம்)

திரு.வி.நந்தீஸ்வரன் (பொறுப்பாசிரியர்), திரு.ரி.ராஜரட்ணம் (பொறுப்பாசிரியர்), திரு.ஆர்.ஜோர்ச் (பகுதித் தலைவர்), றே.கிருஷ்ணச்சந்திரா (உப அணித் தலைவர்), திரு.கே.சிவாஜி (அதிபர்), அ.துஷ்யந்தன் (அணித் தலைவர்), திருமதி வி.இலட்சுமணன் (பிரதி அதிபர்), திரு.எம்.நடராசா (விளையாட்டு முதல்வர்), திரு.எஸ்.விஜயகர்ணன் (பயிற்றுநர்)

நிற்போர் மத்திய வரிசை (இடமிருந்து வலம்)

தி.சிற்சபேசன், ப.காரத்தீபன், த.ராஜ்குமார், சி.சறூன், ஸ்ரீ.சுஜீவன், ச.ஜனாரங்கணன், கே.கபிலன், வி.மங்களதாஸ், கே.கஜேந்திரன், எஸ்.சதீஸ்.

நிற்போர் பின் வரிசை (இடமிருந்து வலம்)

அ.பிரதீப், ச.ஜசிதரன், சி.சுமன், பா.ராஜீவன், ஜெ.ஜெயக்கிருஷ்ணன்.

# மகாஜனா மைதானத்தில் 'நாயகர்களின் போர்'

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி கிரிக்கெட் அணிக்கும் மகாஜனக் கல்லூரி கிரிக்கெட் அணிக்கும் இடையேயான 'நாயகர்களின் போர்' (Battle of the Heroes) தொடரின் வருடாந்த கிரிக்கெட் ஆட்டம் இன்றும் நாளையும் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

இத்தொடரின் மூன்றாவது வருடாந்த ஆட்டம் இதுவாகும். ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் கே.சிவாஜி, மகாஜனக் கல்லூரி அதிபர் பி.சுந்தரலிங்கம் ஆகியோர் இவ்வாட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். இன்று பிற்பகல் 1மணிக்கும் நாளை காலை 9மணிக்கும் ஆட்டம் ஆரம்பமாகும்.

இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையில் இதுவரை நடைபெற்ற இரு ஆட்டங்களும் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்துள்ளன.

நாளை முடிவடையும் இவ்வருட ஆட்டத்தின் இறுதியில் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கிய வீரர்களுக்கும் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்படுபவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-5)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேரமாற்றம்

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 230 மணிக்கு நுணாவில் கிழக்கு அமர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென முன்னர் சகல திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் -

தவிர்க்கமுடியாத காரணத்தினால் கால மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# யாழ். அணிகள் பங்கேற்கும் கொழும்பு கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்21

பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று எதிர்வரும் 24ஆம் திகதிமுதல் கொழும்பு றோயல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த யாழ்.மத்திய கல்லூரி அணி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி என்பன கொழும்பு சென்றுள்ளன.

இச்சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வும், கொழும்பு றோயல் கல்லூரிக்கும் அக்கல்லூரியின் பழைய மாணவர்களுக்குமான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டமும் இன்று நடைபெறவுள்ளன.

ஆட்டங்கள் நடைபெறும் திகதிகளும் பங்குபற்றும் அணிகளின் விவரங்களும் வருமாறு:-

எதிர்வரும் 24ஆம் திகதி -

கொழும்பு றோயல் கல்லூரி எதிர யாழ்.மத்திய கல்லூரி.

சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

எதிர்வரும் 25ஆம் திகதி -

கொழும்பு றோயல் கல்லூரி எதிர சென்.ஜோன்ஸ் கல்லூரி.

யாழ்.மத்திய கல்லூரி எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

எதிர்வரும் 26ஆம் திகதி -

கொழும்பு றோயல் கல்லூரி எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி. (ஒ-5)

# பக்தாத்தில் குண்டு வெடித்ததால் இங்கு எரிபொருளுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்21

ஈராக்கில் அமெரிக்க விமானங்கள நேற்றுக்காலை குண்டுகளை வீசத் தொடங்கியதுமே குடாநாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தனியாருக்கும் சொந்தமான பெரும்பாலான எரிபொருள் நிலையங்களில் 'எரிபொருள் இல்லை' என்று அறிவிப்பு அட்டைகள் தொங்க விடப்பட்டதை காணமுடிந்தது.

அதிலும் எரிபொருள் விற்பனை நிலையங்கள் பலவற்றிலும் ஒரே நேரத்தில் எரிபொருள் நிரப்பும் இயந்திரங்கள் பழுதாகி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டமை பொதுமக்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

இதேவேளை, சில எரிபொருள் விற்பனை நிலையங்கள் கையிருப்பு முடியும் வரை எரிபொருள்களை விநியோகித்தன. அவற்றிலும் பெற்றோல் விரைவில் தீர்ந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது. மண்ணெண்ணெயை நீண்ட வரிசைகளில் காத்திருந்து பொதுமக்கள் வாங்கிச் சென்றனர்.

எரிபொருளை தொடர்ந்து விநியோகித்த 'எரிபொருள் விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவரிடம் இந்த எரிபொருள் தட்டுப்பாடு குறித்துக் கேட்டபோது ஈராக் போரையடுத்து வீண் அச்சம் காரணமாக பலரும் எரிபொருளை வாங்கி சேமித்ததாலேயே எரிபொருள் தட்டுப்பாடு உருவானதாகத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை தனது வாகனத்துக்கு எரிபொருள் நிரப்ப வந்து 'எரிபொருள் இல்லை' என்ற அட்டையைப் பார்த்த ஒருவரை அணுகிய போது அவர் பதுக்கல் வியாபாரம் குறித்து தனது ஆத்திரத்தைக் கொட்டினார்.

'இவர்களிடம் வரி அறவிடுவது தவறே கிடையாது' என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-8-175-ரி)



இப்படி வாங்கினால்....





எரிபொருள் கிடையாதாம்....



சமாதான காலத்திலும் காத்திருப்பா?....

# வலய மட்ட வலைபந்தாட்டம் கொக்குவில் இந்து சம்பியன்

யாழ்ப்பாணம்,மார்ச்21

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் பெண்கள் அணிகளுக்கிடையிலான வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 15வயது, 17 வயதுப் பிரிவுகளுக்கான இறுதியாட்டங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகள் வெற்றியீட்டி இவ்வருட சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், திருக்குடும்ப கன்னியர் மட அணியும் மோதின. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 15:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

அடுத்து நடைபெற்ற 17வயதுப் பிரிவினர்களுக்கான இறுதியாட்டத்திலும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி அதனை எதிர்த்து விளையாடிய சுண்டுக்குளி மகளிர் கல்லூரியை 27:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்து சம்பியனாகியது.

இவ்விரு அணிகளும் நல்லூர் கோட்ட மட்டப் போட்டியிலும் சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.(ஒ-5)

# பண்புகளைப் பாராட்டுவோம்!

## தவக்காலச்சிந்தனை
-17ஆம் நாள்-

"கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்திற்கு மூலைக் கல் ஆயிற்று ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது."

எம் மனம் போன போக்கில் வாழும் எம்மை தடுத்து நிறுத்தி உண்மை நிலையை உணர அழைக்கும் காலமே தவக்காலம் ஆகும். இன்று எமது சமூகம் போட்டி நிறைந்த சமூகமாக மாறிவிட்டது. கல்வியில் போட்டி, பொருளாதாரத்தில் போட்டி, வழிபாடுகளில் போட்டி என எதற்கெடுத்தாலும் போட்டி பணம் படைத்தோர் பணமில்லாத ஏழை, எளியவர் தம்முடன் சேரக்கூடாது என எண்ணுகிறார்கள். 'ஆலய வழிபாடுகள் எனக்குத்தான். நான் தான் முன்னின்று செய்யவேண்டும் அடுத்தவன் வரக்கூடாது. வரவும் விடமாட்டோம்' என வாழ்கின்றோம்.

ஆனால், இதனால் எமது சமுதாயத்தில் இன்று நிகழ்வது தான் என்ன? புரிந்துணர்வின்மை, சண்டை, சச்சரவுகள் என ஏகப்பட்ட பிரச்சினைகள்.. என் அயலான் முன்னேறிவிட்டால் எனக்குப் பொறாமை. அவனை எப்படி வீழ்த்தலாம்?' என சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டு இருக்கின்றோம். ஆனால், இறைவன் எம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் வழியாக மனம்மாற அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கின்றார். ஆனால், நாம் அதனைத் தட்டிக்கழித்துக் கொண்டிருக்கின்றோம். எம் அருகில் இருக்கும் ஏழைகளுடன் உறவாடுவது எமக்கு அவமரியாதை என எண்ணுகின்றோம். ஆனால், அவ்ஏழைகளே விண்ணரசிற்கு இறைவனால் அழைக்கப்பட்ட தகுதியுள்ளவர்கள் என்பதனை மறந்துவிடுகின்றோம். ஏழைகள் உயர்ந்து வரும் வேளை பொறாமைப்படுகின்றோம். குறையுடையோரும் நிறையுடையோரும் இருப்பது இயல்பு. சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் மற்றவர்களின் வளர்ச்சிக்காக உழைக்க இறைவன் வாய்ப்பளித்திருக்கின்றார். எனவே, மற்றவர்களது குறைகளைக் காண்பதைவிட அவர்களது பண்புகளை நாம் பாராட்ட முன்வர வேண்டும். உதட்டினால் அல்லாது உள்ளத்தினால் பாராட்ட வேண்டும். எனவே, இத்தவக்காலத்தில் எம்பழைய வாழ்வினை விடுத்து, புதிய இயல்புகளை எம் வாழ்வில் கொண்டு நற்செயல் புரிவோம்.

ஸா.ரேசி